Chundikuli Branch Library

Registered as a Newspaper

பக்கங்கள் 06

விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆவணி 23 (08-09-1993) புதன்கிழமை ஓசை 202

## மன்னாருக்கு பொருளுடன் வந்த கப்பல் திடீர் மறைவால் அதிகாரிகள் அதிர்ச்சி

உணவுப் பொருள்களையும், சீமெந்து பக்கற்றுகளையும் கொழும்பில் ஏற்றிக் கொண்டு மன்னார் வந்த சரக்குக் கப்பல் மன்னார் பேசாலைக் கடலில் இரவு தரித்து நின்றவேளை மாயமாய் மறைந்துவிட்டதாம். சீமெந்து பைகளை இறக்கியபொழுது இருட்டிவிட்டதால் மறுநாள் உணவுப் பொருள்களை இறக்கும்பொருட்டு கப்பல் பேசாலைப் பகுதி கடலில் தரித்து நின்றவேளையே கப்பல் மறைந்தது. கடந்த சனியன்று நடைபெற்ற இச் சம்பவம்பற்றித் தெரியவருவதாவது: அன்றையதினம் இக் கப்பலில் இருந்து உணவுப்பொருள்களை இறக்க 15 படகுகளுடனும், 600 தொழிலாளர்களுடனும் மன்னார் கச்சேரி அதிகாரிகள் துறைமுகம் சென்றபோது அங்கு கப்பலைக் காணாது அதிர்ச்சியடைந்தனர். இதனையடுத்து கப்பல் மாயமாய் மறைந்துவிட்டதாக செய்தி எங்கும் பரவியது கப்பல் கடத்தப்பட்டு [6ஆம் பக்கம் பார்க்க]

# வடக்கு-கிழக்கிலுள்ள ஆயுதப்படை கட்டமைப்பிலும் விரைவில் மாற்றம்!

## கள அதிகாரிகளுக்கு விசேட அதிகாரம்

(கொழும்பு)

சிறிலங்கா ஆயுதப்படைக் கட்டமைப்பில் செய்யப்பட்ட பாரிய மாற்றத்தினைத் தொடர்ந்து வடக்கு – கிழக்கு ஆயுதப் படையினரின் கட்டமைப்பிலும் விரைவில் மாற்றங்கள் இடம் பெறலாம் என இராணுவ வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது இம்மாற்றத்தின் போது யுத்த நிலைமைக்கேற்ப களத்திலுள்ள அதிகாரிகள் முடிவை எடுப்பதற்கான அதிகாரங்கள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

நேற்று முன்தினம் கூட்டுப் படை நடவடிக்கை தலைமையகம் கலைக்கப்பட்டு ஏழு தளபதிகள் கொண்ட பாதுகாப்பு இணைப்புக்குழு ஒன்று அமைக்கப்பட்டதன் மூலம் சிறிலங்கா பாதுகாப்பு படையில் முழுமையான கட்டமைப்பு மாற்றம் செய்யப்பட்டுள்ளமை தெரிந்ததே. இதனைத் தொடர்ந்து வடக்கு - கிழக்கு இராணுவ கட்டமைப்பிலும் மாற்றங்கள் விரைவில் ஏற்படவுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதுகுறித்து 'ஐலண்ட்' பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது.

வடக்கு கிழக்கு இராணுவ கட்டமைப்பிலும் விரைவில் மாற்றங்கள் செய்யப்படவுள்ளதாகவும் விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரைத் தொடர இது அவசியமானது எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாற்றங்கள் களத்தில் உள்ள அதிகாரிகள் நிலைமைக்கு ஏற்ப முடிவை எடுக்க அதிகாரத்தை வழங்கக்கூடியதாக அமைந்திருக்கும். இந்த படை கட்டமைப்பு மாற்றம் வடக்கு கிழக்கிலுள்ள இராணுவம், கடற்படை, விமானப் படை என்பவற்றுக்கு பொருந்தும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## கிளாலியில் ஹெலி தாக்கு

(தென்மராட்சி)

கிளாலிக் கடற்கரைப்பகுதியில் நேற்றிரவு 9.30 மணியளவில் உலங்குவானூர்தி ஒன்று கலிபர் தாக்குதலை நடத்திய வண்ணமிருந்தது. இதேவேளை ஆலங்கேணிப் பகுதியிலும் உலங்குவானூர்தி தாக்குதல் நடத்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேசமயம் நேற்று பயணிகள் படகுசேவை பாதிப்பு ஏதுமின்றி நடைபெற்றது. பெருமளவிலான பயணிகள் கிளாலியிலிருந்து ஆலங்கேணி சென்றனர். (86)

## அதிரடிப்படை முகாம்கள் மேலும் அதிகரிக்க முடிவு

[கொழும்பு]

மட்டக்களப்பு மாவட்டத்தில் இம்மாதம் 15 ஆம் திகதி முதல் மேலும் சில பகுதிகளில் அதிரடிப்படை முகாம்கள் அமைக்கப்படவுள்ளன. தற்போது இம் மாவட்டத்தின் தென்பகுதியிலிருந்து ஆரையம்பதி வரை முகாமிட்டிருக்கும் அதிரடிப்படையினர் இனி கல்லடி முதல் வாழைச்சேனை வரையான பிரதான வீதியின் கேந்திர இடங்களில் முகாமிடவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. எனினும் மட்டக்களப்பு நகரில் பொலிசாரே கடமையிலீடுபடுவர்.

இதே சமயம் மட்டக்களப்பு செயலகத்திற்கு பாதுகாப்பு காரணங்களுக்காக எவரும் வாகனத்தில் செல்வது தடை செய்யப்பட்டுள்ளது. இவர்கள் தமது வாகனங்களை இராணுவ சோதனை நிலையத்தில் நிறுத்திவிட்டு செயலகத்திற்குரிய வேறு வாகனங்களில் ஏறியே உள்ளே செல்ல முடியும்.

## கடற்புலிகள் வளர்ச்சியினால் கரையோர முகாம்களை வாபஸ் பெறவேண்டிய நிலை

(கொழும்பு)

ஈழப்போர் ஒரு தீர்க்கமான கட்டத்தை இப்போது எட்டி நிற்பதாகவும் கடற்புலிகளை எதிர்கொள்ள வேண்டிய

கரையோர இராணுவ முகாம்களுக்கான விநியோகத்தை கட்டுப்படுத்தும் வகையில் கடற்படைப் படகுகள் மற்றும் கப்பல்கள் மீது கடற்

லாம் என்றும் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் இந்திய மற்றும் சிறிலங்கா கடற்படைகள் பாக்கு நீரிணையில் கூட்டு நட

## சிறிலங்காவின் கடல்தடை இந்தியா பரிசீலனை

[கொழும்பு]

இலங்கையின் வடகிழக்குப் பகுதி கடற்பரப்பினை இலங்கைஅரசு தடைசெய்துள்ளமை குறித்து இந்திய அரசு பரிசீலித்துவருகிறது மேற்படி கடல் தடைச் சட்டத்தினால் இந்திய மீனவர்களினால் கச்சதீவுப்பகுதியில் மேற்கொள்ளப்படும் மீன்பிடித் தொழில் பாதிப்படையுமா என்பது குறித்தும் கச்சதீவு தொடர்பாக இலங்கையுடன் இந்தியா செய்துகொண்ட ஒப்பந்தத்திற்கு மேற்படி தடைச்சட்டம் முரணானதா என்பது குறித்தும் இந்திய அரசு பரிசீலித்து வருகிறது.

## இரு மாதங்களில் படைக்கு பல மில்லியன் ரூபா இழப்பு

(கொழும்பு)

இரண்டாம் ஈழப் போர் என்று பொதுவாக வர்ணிக்கப்படும் இன்றைய யுத்தம் வெடித்த பின்பு கடந்த இரண்டு மாதங்களிலும் மட்டும் சிறிலங்கா இராணுவம் பேரிழப்புகளை சந்தித்து இருப்பதாகக் கூறப்படுகிறது.

சண்டே ரைம்ஸ் பத்திரிகையின் பாதுகாப்பு விவகார விமர்சகர் வடமராட்சிக் கடற்பரப்பில்கடற்படையின்சுப்பர் டோறா படகு தகர்க்கப்பட்ட சம்பவம் பற்றி எழுதிய விபரணக் கட்டுரையில் மேலும் குறிப்பிடுகையில், ஜனகபுர இராணுவ முகாம் மீதான தாக்குதலில் ஐம்பது மில்லியன் ரூபா பெறுமதியான சாதனங்களையும், கிளாலிக் கடற்பரப்பில் முப்பது மில்லியன் ரூபா பெறுமதியான சாதனங்களையும், வடமராட்சிக் கடலில் முந்நூறு மில்லியன் ரூபா பெறுமதியான சாதனங்களையும் சிறிலங்கா அரசு இழந்து விட்டிருப்பதை சுட்டிக் காட்டியுள்ளார்.

## கடந்த 29-ம் திகதி ஊரடங்கு நீக்கப்பட்டது

(கொழும்பு)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் அமுலுக்கு கொண்டுவரப்பட்ட ஊரடங்குச் சட்டம் கடந்த 29ஆம் திகதி காலை முதல் நீக்கப்பட்டு விட்டதாக இராணுவ தரப்பு பேச்சாளர் பிரிகேடியர் தளின் அங்கமன தெரிவித்தார்.

ஊரடங்குச் சட்டம் நீக்கப்படவில்லை எனக் காரணம் காட்டி பலநாட்களாக யாழ். நகர வங்கிகள் தமது முழுமையான அன்றாடக் கடமைகளை நிறுத்திவிட்டு அரசின் அறிவிப்புக்காக காத்துக் கிடந்தமை குறிப்பிடத்தக்கது.

## கட்டுவன் படையினர் சூடு குடும்பஸ்தர் காயம்

(யாழ்ப்பாணம்)

வலிவடக்கில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்தினால் குடும்பஸ்தர் ஒருவர் காயமடைந்தார்.

நேற்றுக்காலை 10.00 மணி

வத்தினர் ஏழாலைப் பகுதியை நோக்கி மேற்கொண்ட துப்பாக்கி சூட்டினால் குருநாதி சிவபாக்கியநாதன் (வயது 41) காலில் காயமடைந்தார். இவர் வீட்டின் கூரையில் ஏறி

மனைவிலான பயணிகள் கிளாலியிலிருந்து ஆலங்கேணி சென்றனர். (86)

அமைக்கப்பட்டதன் மூலம் சிறிலங்கா பாதுகாப்புப் படையில் முழுமையான கட்டமை

வுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதுகுறித்து 'ஐலண்ட்' பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது.

இது அவசியமானது எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாற்றங்கள் களத்தில் உள்ள அதிகாரிகள் நிலை

னுவம், கடற்படை, விமானப் படை என்பவற்றுக்கு பொருந்தும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## அதிரடிப்படை முகாம்கள் மேலும் அதிகரிக்க முடிவு

[கொழும்பு]

மட்டக்களப்பு மாவட்டத்தில் இம்மாதம் 15 ஆம் திகதி முதல் மேலும் சில பகுதிகளில் அதிரடிப்படை முகாம்கள் அமைக்கப்படவுள்ளன. தற்போது இம் மாவட்டத்தின் தென்பகுதியிலிருந்து ஆரையம்பதி வரை முகாமிட்டிருக்கும் அதிரடிப்படையினர் இனி கல்லடி முதல் வாழைச்சேனை வரையான பிரதான வீதியின் கேந்திர இடங்களில் முகாமிடவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. எனினும் மட்டக்களப்பு நகரில் பொலிசார் கடமையிலீடுபடுவர்.

இதே சமயம் மட்டக்களப்பு செயலகத்திற்கு பாதுகாப்பு காரணங்களுக்காக எவரும் வாகனத்தில் செல்வது தடை செய்யப்பட்டுள்ளது. இவர்கள் தமது வாகனங்களை இராணுவ சோதனை நிலையத்தில் நிறுத்திவிட்டு செயலகத்திற்குரிய வேறு வாகனங்களில் ஏறியே உள்ளே செல்ல முடியும்.

## 3 பிரெஞ் தாக்குதல் படகுகள் விரைவில் கடற்படைக்கு

(கொழும்பு)

கடந்த மாதத்தில் சிறிலங்கா கடற்படை இழந்த மூன்று ரோந்து படகுகளை ஈடு செய்யும் வகையில் பிரெஞ் விரைவு தாக்குதல் படகுகளை கடற்படை பெற்றுக்கொள்ள இருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்த படகுகள் அடுத்த ஆறு வாரங்களில் கொழும்பு வந்து சேரலாம் என எதிர் பார்க்கப்படுகிறது.

இவற்றில் இரு விரைவு தாக்குதல் படகுகள் பிரான்ஸில் உள்ள தனியார் கப்பல் கட்டும் நிறுவனம் ஒன்றின் உதவியுடன் கொழும்பு டொக்யார்ட் நிறுவனத்தால் உருவாக்கப்படும் என்றும் இதைவிட மேலும் இரு படகுகளை பிரெஞ் தொழில் நுட்பத்தை பெற்று அவற்றை கொழும்பிலேயே தயாரிக்க டொக்யார்ட் நிறுவனம் திட்டமிட்டுள்ளது எனவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

## கடற்படை பலத்தை அதிகரிக்க வேண்டுமாம்

(கொழும்பு)

சிறிலங்கா கடற்படையினர் மீது விடுதலைப்புலிகள் தொடர்ச்சியாகத் தாக்குதல் நடாத்தி வருவதால் கடற்படையினரது பலத்தை அதிகரிக்க வேண்டுமென்று பாதுகாப்புத்துறை அதிகாரிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

விடுதலைப்புலிகளுக்கு வெளியில் இருந்து வந்துசேரும் ஆயுதங்களை தடை செய்ய வேண்டுமாயின் நவீன ஆயுதங்களைக் கொண்ட கடற்படையை உருவாக்க வேண்டுமென்றும் அவர்கள் மேலும் கூறியுள்ளனர்.

## புக்காரா குண்டுவீச்சில் ஆலங்கேணியில் இருவர்பலி

(தென்மராட்சி)

நேற்று முன் தினம் இரவு ஆலங்கேணிப்பகுதியிலும் புக்காரா விமானங்கள் குண்டு வீச்சை நடத்தியதாக தெரிவிக்கப்படுகிறது. இத் தாக்குதலினால் படகோட்டியான பாலசந்திரன் கமலதாசன் [16] என்பவர் பலியானார். இச் சம்பவத்தில் மேலும் ஒருவர் பலியானதாக தெரிவிக்கப்பட்ட போதிலும் அவரின் பெயர் விபரம் தெரிய வரவில்லை. இவர்கள் படகில் இருந்த போதே விமானத் தாக்குதலுக்கு இலக்கானதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்றுமுன்தினமிரவு கிளாலி கரையோரப்பகுதியிலும் கடற்பகுதியிலும் புக்காரா விமானங்கள் தாக்குதல் நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை நேற்று முன்தினமிரவு படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலினால் நாகர் கோவிலைச் சேர்ந்த எஸ். சண்முகநாதன் (25) என்பவர் காயமடைந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (86,30)

கடற்புலிகள் வளர்ச்சியினால்

# கரையோர முகாம்களை வாபஸ் பெறவேண்டிய நிலை

(கொழும்பு)

ஈழப்போர் ஒரு தீர்க்கமான கட்டத்தை இப்போது எட்டி நிற்பதாகவும் கடற்புலிகளை எதிர்கொள்ள வேண்டிய நிலைக்கு கடற்படை உள்ளாக்கப்பட்டிருப்பதாகவும், ஐலண்ட் இதழின் விமர்சகர் சாமிந்திர பெர்டினண்டோ சுட்டிக்காட்டியுள்ளார்.

கரையோர இராணுவ முகாம்களுக்கான விநியோகத்தை கட்டுப்படுத்தும் வகையில் கடற்படைப் படகுகள் மற்றும் கப்பல்கள் மீது கடற்புலிகள் தாக்குதல் நடத்துவதாகவும், இதனால்கரையோர முகாம்களை வாபஸ்பெற வேண்டிய இக்கட்டான நிலைக்கு அரசாங்கம் உட்படலாம் என்றும் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் இந்திய மற்றும் சிறிலங்கா கடற்படைகள் பாக்கு நீரிணையில் கூட்டு நடவடிக்கையில் ஈடுபடுவதன் மூலமே குடாநாட்டின் மீதான தாக்குதலை தீவிரப்படுத்த முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புலிகளினதும் தமிழ்மக்களினதும் உறுதியை குலைக்க முடியாது

### அமைச்சர் தொண்டமான்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தாமல் நாம் ஒரு தலைப்பட்சமாக எந்தத் தீர்வையும் எடுக்க முடியாது அது நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதாகவே அமையும்.

கிராமியத் தொழிற்துறை, சுற்றுலாத்துறை அமைச்சர் சௌ. தொண்டமான் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை கொழும்பு இந்து இளைஞர் மன்றம் அளித்த வரவேற்பு விழா, பம்பலபிட்டி புதிய கதிரேசன் ஆலயத்தில் இடம்பெற்ற போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசும் போது வடக்கு, கிழக்குப் பிரச்சினைக்கு விடுதலைப் புலிகளுடன் பேசியே தீர்வு காண வேண்டும் அதுவே நிலைத்து நிற்கக் கூடிய தீர்வாக இருக்கும் என்றார்.

இதேசமயம் அமைச்சர் தொண்டமான் கொழும்பிலிருந்து வெளிவரும் வாரவெளியீடு ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தேசிய இனப்பிரச்சினையைப் பொறுத்தவரையில் போராட்டத்தில் ஈடுபட்டிருப்பவர்களும், தமிழ் மக்களும் தியாக உணர்வுடன் உறுதியாக உள்ளனர். இந்த உறுதிப்பாட்டைக் குலைக்க முடியாது என்ற நிலைக்கு அரசாங்கம் தள்ளப்படவேண்டும். அத்துடன் எவ்வளவுதான்

(5ஆம் பக்கம் பார்க்க)

# ஆயுதக் கொள்வனவு குறித்த குற்றச்சாட்டுக்கள் தவறானவை

### ஜெனரல் சிறில்ரணதுங்க பேட்டி

(லண்டன்)

பாதுகாப்புப்படைகளுக்கு ஆயுதக் கொள்வனவு செய்ததில் தவறுகள் பலஇடம் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு முன்னாள் பாதுகாப்புச் செயலரும், சிறிலங்காவின் இங்கிலாந்து உயர் ஸ்தானிகருமான ஜெனரல் சிறில் ரணதுங்கா மறுப்புத் தெரிவித்துள்ளார்.

லண்டன் செய்தியாளர் ஒருவருக்கு அவர் கருத்துத் தெரிவிக்கையில் ஒரு சந்தர்ப்பத்தில் மாத்திரம் கேள்விப் பத்திரத்தைக் கவனிக்காமல் டாங்கிகளைக் கொள்வனவு செய்ததாகச் சொன்னார். இராணுவத் தளபதியின் சிபாரிசின் அடிப்படையிலேயே இந்தக் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

கேள்விப் பத்திரம் கோராமல் ஆயுதக் கொள்வனவு செய்ய ஒழுங்கு விதிகள் அனுமதிக்காது ஒருமுறை மாத்திரம் கேள்விப் பத்திரமில்லாது யுத்த டாங்கிகள் கொள்வனவு செய்யப்பட்டன; இராணுவத் தளபதியின் சிபாரிசை அமைச்சரவையின் உப-குழு

(5 ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலி–பூநகரி படகுச்சேவை

கிளாலி–பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

## ஊரடங்கு நீக்கப்பட்டது

(கொழும்பு)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் அமுலுக்கு கொண்டுவரப்பட்ட ஊரடங்குச் சட்டம் கடந்த 29ஆம் திகதி காலை முதல் நீக்கப்பட்டு விட்டதாக இராணுவ தரப்பு பேச்சாளர் பிரிகேடியர் நளின் செனவிரத்ன தெரிவித்தார்.

ஊரடங்குச் சட்டம் நீக்கப்படவில்லை எனக் காரணம் காட்டி பலநாட்களாக யாழ். நகர வங்கிகள் தமது முழுமையான அன்றாடக் கடமைகளை நிறுத்திவிட்டு அரசின் அறிவிப்புக்காக காத்துக் கிடந்தமை குறிப்பிடத்தக்கது.

## கட்டுவன் படையினர் சூடு குடும்பஸ்தர் காயம்

(யாழ்ப்பாணம்)

வலிவடக்கில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்தினால் குடும்பஸ்தர் ஒருவர் காயமடைந்தார்.

நேற்றுக்காலை 10.00 மணியளவில் கட்டுவன் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் ஏழாலைப் பகுதியை நோக்கி மேற்கொண்ட துப்பாக்கி சூட்டினால் குருநாதி சிவபாக்கியநாதன் (வயது 41) காலில் காயமடைந்தார். இவர் வீட்டின் கூரையில் ஏறியிருந்த போதே காயமடைந்தார்.

மருதானையில் கைதானவரை

## பணம் பெற்றுக்கொண்டு பொலிசார் விடுவித்தனர்

(கொழும்பு)

மருதானையில் உள்ள விடுதி ஒன்றில் வைத்து கைதான யாழ் வாசியொருவரிடமிருந்து பணம் பெற்றுக்கொண்டு அவரை பொலிசார் விடுவித்துள்ளனர். விடுதியில் வைத்து கைதான இவரை பொலிசார் மருதானை பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர்.

அங்கு இவரிடமிருந்த 2000 ரூபா பணத்தை பெற்றுக் கொண்ட பொலிசார் நான்கு நாட்களின் பின் இவரை விடுவித்துள்ளனர். இதே சமயம் கொழும்பு கோட்டை கரையோரத் துறை பொலிஸ் நிலையங்களில் மூன்று நாட்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த கிளிநொச்சியை சேர்ந்த தி. வேல்முருகன் (27) என்பவரும் அல்வாயை சேர்ந்த இ. யோகராசா (35) என்பவரும் பொலிசாரால் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

## கைதிகள் தாக்கியதில் சிறைக்காவலர் காயம்

### பூந்தமல்லி சிறையில் சம்பவம்

[சென்னை]

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக பூந்தமல்லி விசேட சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர்கள் சிறைக் காவலர் இருவரை நையப்புடைத்ததாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் காலை உணவு வழங்குவதற்காக மேற்படி இரு காவலர்களும் பூந்தமல்லி சிறையில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர்களை அழைத்துச்சென்ற போதே சந்தேக நபர்கள் இவ்விரு காவலர்களையும் பலமாகத் தாக்கினராம்.

இவர்களின் தாக்குதலுக்கு இலக்காகிப் படுகாயமடைந்த காவலர் ஒருவர் உடனடியாக மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## குமாரியில் வந்த தபால்கள் இன்று விநியோகம்

யாழ். பிரதான தபாலகத்திற்கு இம்முறை 'குமாரி' கப்பலில் 196 உள்ளூர் மற்றும் வெளியூர்த் தபால் பொதிகள் எடுத்து வரப்பட்டுள்ளன.

இவை நேற்று உடன் இறக்கப்பட்டு யாழ். பிரதான தபாலகம் கொண்டுவரப்பட்டன. மேலும் இப் பொதிகள் இன்று உடன் தரப்பிரிக்கப்பட்டு சகல முடங்களுக்கு விநியோகிக்கப்படவுள்ளதாக யாழ். பிரதான தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

(பா) (சி)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

நல்லநிலையில் உள்ள வில்லியர்ஸ் மார்க் 25 நீரிறைக்கும் இயந்திரமும் C50 மோட்டார் சையிக்கிளும் விற்பனைக்குண்டு. தொடர்பு: K சங்கர், பிரதாப் வீடியோ நிலையம், கண்டிவீதி, சாவகச்சேரி (5062)

### தவறிவிட்டது

திருநெல்வேலி A G A அலுவலகத்திற்கும் காங்கேசன் துறை வீதி, நாச்சிமார் கோயிலடி கேசரப்பிள்ளையார் கோவிலடிக்கும் இடையில் 24-8-93 அன்று காலை தி. பத்மாவதியினுடைய நான்கு உணவு முத்திரைகள் (மண்ணெண்ணெய் முத்திரை) தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (5908)

### அராலியூராரின் நாடகங்கள்

1955, 1956ஆம் ஆண்டுகளில் பேராதனைப் பல்கலைக் கழகத்தில், பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் நாடகங்களில் நடித்த - 250 நாடகங்களை எழுதிய அராலியூ சுந்தரம்பிள்ளையின் நாடகங்கள் 1. கெட்டிக்காரர்கள் 2 முதலாம்பிள்ளை 30/- (5838)

## 6-ம் மாத நினைவஞ்சலி



மலர்வு 1968.12.12

உதிர்வு 1993.3.14

திருமதி

### தங்கராசா சிவனேஸ்வரி

வெள்ளாம் போக்கட்டி எனும் பகுதியினிலே
களிப்புடன் இல்வாழ்வு ஏற்றாயே
மைந்தர் மூவரைப் பெற்றெடுத்து
இல்வாழ்வதனையும் சிறப்பித்தாய்.
மழலை முத்துக்கள் மூன்றையுமே
மடியில் வைத்துக் காத்தாயே
இல் வாழ்வதனில் இன்புற்றிருக்க
காலன் உன்னைக் கவர்ந்தானே.
கணவன் தனையும் கலங்க விட்டு
பிள்ளைச் செல்வங்களை பதறவிட்டு
எங்கே சிவா நீ சென்றிட்டாய்
கண்களிலே நீர் மல்க தினமும் உங்கள்
பாதத்தில் விழி நீரைச் சிந்துகிறோம்
மாதம் ஆறு ஆனாலும்
மாறவில்லை எம் துயரம்
உன் ஆன்மா சாந்தி எய்தி
உள்ளம் உருக இறைஞ்சுகிறோம்.

உன்பிரிவால் துயருறும்

வெள்ளாம் போக்கட்டி, கொடிகாமம். (5840)

கணவன், பிள்ளைகள், மற்றும் உற்றார், உறவினர்.

## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 9.11.68

வீரச்சாவு 8.9.86

### குணரட்ணம் சிவமனோகரன்

[ஜேம்ஸ்]

தமிழர் துயர் துடைக்க, தம்பி வழி சென்று தளராது களத்தில் நின்று மண்ணிற்காக போராடி தம் முயிரை அர்ப்பணித்த உமது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

என்றும் உன்நினைவுடன்
அம்மா, அப்பா,
சகோதரங்கள்,

வி. எம். வீதி, பருத்தித்துறை.

(சி-7362) சித்தப்பா குடும்பத்தினர்

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம்: 10 – 03 – 1935



மறைவு: 10 – 08 – 1993

அமரர்

### தருமலிங்கம் கணேசலிங்கம்

(இளைப்பாறிய சுகாதார வைத்திகரும், காப்புறுதிக் கூட்டுத்தாபன முகவரும்)

தனிமனாய் தோன்றி- தன் ஒளியினனாய் மருவி
தொனியினால் நக்கிடும் தூயவனே! கணேசனே!
இனியனாய் உலகினில் எவர்க்கும் இரங்கிடும்
கருணையோனே! கணேசலிங்கமே!
சனிசனாய் அறுவரும், கடி மண மனைவியும்
அனைவரும் புலம்பிடல் அறியவும் வருவாயே!
பிணிசனாய் பெருகிடும் பிரிவு துயர்கள் மறையவும்
பரிவுடன் அன்பனே! பார் மீதும் நீ வருவாயே!

## அந்தியேட்டி அழைப்பிதழும் நன்றி நவிலலும் 09- 9-1993



பிறப்பு 1946-10-09

இறப்பு 1993-08-10

அமரர்

### திரு. பாலசுப்பிரமணியம் மேகவர்ணன்

[பாலா, ராசா]

அல்லும் பொழுதும், நாம் அழுதும் புலம்பிட
அலை கடலும் எழுந்தே - உனை அரவணைத்து சென்றதுவோ
கொல்லும் விதியும் கொடுங்காற்றாய் மாறியே,
கொற்றவன் உனை உடன் அழைத்தும் சென்றதுவோ!
வெல்லும் மதியும் வேண்டுவோர் அன்பும்
வெற்றுடல் ஈந்த தாய் விண்ணினுள் கலந்ததுவோ!
சொல்லும் மொழியும் சௌந்தர்ய ஒளியும்
சிவபதம் சேர சோகம் - மண்ணில் விளைந்ததுவோ!

[10-08-93 அன்று இனாலிக் கடலில் நடந்த விபத்தில் எம்மை விட்டுப் பிரிந்த எமது தலைவனின் அந்தியேட்டிக்கிரியை 09.09.93 (வியாழக்கிழமை) நாளை எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.]

துயரச் செய்திகேட்டு நேரில் வந்து அனுதாபம் தெரிவித்தவர்கட்கும், அனுதாபச் செய்தி அனுப்பியவர்கட்கும், சகல வழிகளிலும் உதவிகள் புரிந்த யாவரிற்கும் எமது நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்றி

இங்ஙனம்
அன்பு மனைவி
பிள்ளைகள்
சகோதரர் உறவினர்.

கே கே. எஸ் வீதி, வல்வெட்டித்துறை

(5846)

## நினைவு கூருகின்றோம் ...

### 1993-09-08

1986ஆம் ஆண்டு இத்தினத்தில் பருத்தித்துறைப் பகுதியில் சிறிலங்காப் படையினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய,

**காந்தன்** (வேலாயுதம்பிள்ளை உதயகுமார் - கல்வியங்காடு - யாழ் )

**ஜேம்ஸ்** (குணரட்ணம் சிவமோகன் - விநாயகமுதலியார் தெரு - பருத்தித்துறை)

யாழ் - கோட்டை காவலரண் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் எறிகணை தாக்கியதில் வீரச்சாவெய்திய,

## இறையருள் எய்திட வேண்டுதலும் அந்தியேட்டி நிகழ்வின் அழைப்பும்

வல்வை

### செல்வி இளவேனி அதிரூபசிங்கம்



வல்வை

# செல்வி இளவேணி அதிருபசிங்கம்



சகத்தினிற் சனனம்

03 - 05 - 1970

சாகரத்திற் சங்கமம்

10 - 08 - 1993

ஆடுகின்றாய்
வாடுகின்றோம்
ஓடி நீயும்
தேடியுனைக்
கூடுவிட்டுப்
பாடிப்பாடிக்
கூடுவிட்டு
கூடுவிட்டுப்
கூடுவிட்டுப்
வாடி நிற்கும்
வாடி நிற்கும்
பாடி நீயும்
வீடுபெற்று
கூடவேண்டும்
கூடியிருந்தே
வாடி நிற்பாய்

எம்நெஞ்சில்
இரவுபகல்
போனதனால்
காணாமல்
பறந்தகுயில்
களிப்புடனே
நீயுமெங்கோ
பறந்து நீயும்
பறந்த நீயும்
எம்மைப்பார்த்து
எம்மைப்பார்த்து
நாடி நிற்பாய்
நீயும் உய்ந்திட
உனக்கேயென்று
பரமன் தாளில்
எம்மையெல்லாம்

அலையெனவே
வாடியிங்கே
உளமெலாம்
தினமுமிங்கே
குரலெடுத்துப்
பரவசமாய்ப்
சிறகடித்துப்
சென்றவிடம்
குரலெடுத்துப்
வாடி நீயும்
வாடி நீயும்
பரமன் நடி
நாடி நிற்போம்
இறைவன் இன்னருள்
நீயுமென்றும்
வாழ்த்திநீயும்

மோதுகின்றாய்
வதங்குகின்றோம்
வெதும்புகின்றோம்
வேகுகின்றோம்
பாடும்மா
பறக்குமம்மா
பறந்துவிட்டாய்
எங்கேயம்மா?
பாடுவாயா?
வதங்குவாயா?
வதங்கவேண்டாம்
நாளையென்றும்
நாமுமெல்லாம்
இனி காவென்றும்
இணைந்தவளாகி
இனிதாயென்றும்.


10-08-1993 இல் கிளாலிக் கடலேரியிலே ஏற்பட்ட அனர்த்தம் காரணமாக இவ்வுலக வாழ்வை நீத்து, எம்மைவிட்டுப்பிரிந்து சென்ற எமது ஆருயிர்ப்புதல்வி செல்வி இளவேணி அவர்களின் அந்தியேட்டிக் கிரியா நிகழ்வுகள் நாளை (09-09-1993) வியாழக்கிழமை, நெடியகாட்டிலுள்ள எமது வதிவிடத்தில் அதிகாலை 3. 30 மணியளவில் ஆரம்பமாகி நடைபெறும். அத்தருணம் அன்புள்ளம் கொண்டோர் யாவரும் இக் கிரியா நிகழ்வுகளிற் கலந்து கொண்டு, எமது புதல்வியின் ஆன்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் ஆன்ம ஈடேற்றத்தின் தன்மையில் நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொண்டு எம் உள்ளங்களை நிறைவடையச் செய்யும் வண்ணம் மிக வினயமாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

- குடும்பத்தினர்

நெடியகாடு,
வல்வெட்டித்துறை

(5813)

---



1935 1993

அமரர்

## தருமலிங்கம் கணேசலிங்கம்

(இளைப்பாறிய சுகாதார விகிதரும்,
காப்புறுதிக் கூட்டுத்தாபன முகவரும்)

தனிமனாய் தோன்றி- தன் ஒளியினனாய் மருவி
தொனியினால் நக்கிடும் தூயவனே! கணேசனே!
இனியனாய் உலகினில் எவர்க்கும் இரங்கிடும்
கருணையோனே! கணேசலிங்கமே!
சனிசனாய் அறுவரும், கடி மண மனைவியும்
அனைவரும் புலம்பிடக் அறியவும் வருவாயே!
பிணிசனாய் பெருகிடும் பிரிவு துயர்கள் மறையவும்
பரிவுடன் அன்பனே! பாரி மீதும் நீ வருவாயே!

எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு பல வழிகளிலும் எமக்கு உதவிகள் புரிந்தோர்க்கும் அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு ஆன்ம சாந்தி வேண்டி பிரார்த்தித்து நின்ற அனைவருக்கும் எங்களின் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

நாளை வியாழக்கிழமை (9-9-93) அன்று எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறும் அனைவரையும் வேண்டிக்கொள்கின்றோம்.

அன்புடன் நினைவு கூரும்

அம்மன் கோவிலடி,
வல்வெட்டித்துறை

மனைவி, மக்கள், மருமகன், உற்றார், உறவினர், நண்பர்கள்.

(5901)

---

## 2-ம் ஆண்டு நினைவுதினம்



## 2-ம் லெப்டினன்ட் சலுஜா

(கணபதிப்பிள்ளை ரதீஸ்வரி)

தாயின் மடியில்: 30-04-1971

தாயக மண்ணில்: 08 09-1991

ஈராண்டென்ன ஈர்பத்தாண்டு சென்றாலும்
நீங்காத உன் நினைவை மீட்டியே பார்க்கின்றோம்
வாடாத உன்முகத்தை சோராது தேடுகின்றோம்
துள்ளும் நடையழகை எண்ணியே ஏங்குகின்றோம்
ரதி. ரதி என உன்பேர் சொல்லி கூப்பிட்டுப்
பார்க்கின்றோம் இன்னும் வரக் காணலியே.

உன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்

அண்ணா சிலையடி,
கரணவாய்,
கரவெட்டி.

குடும்பத்தினர்

(5904)

---

கே. கே. எஸ் வீதி,
வல்வெட்டித்துறை

அன்பு மனைவி
பிள்ளைகள்
சகோதரர் உறவினர்.

(5846)

---

## நினைவு கூருகின்றோம் ...

## 1993-09-08

1986ஆம் ஆண்டு இதேதினத்தில் பருத்தித்துறைப் பகுதியில் சிறிலங்காப் படையினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய,

காந்தன் (வேலாயுதம்பிள்ளை உதயகுமார் - கல்வியங்காடு - யாழ் )

ஜேம்ஸ் (குணரட்ணம் சிவமோகன் - விநாயகமுதலியார் தெரு - பருத்தித்துறை)

யாழ் - கோட்டை காவலரண் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் எறிகணை தாக்கியதில் வீரச்சாவெய்திய,

ராஜன் (ஜேம்ஸ் உதயபிரசாத் - 31 மவுண்கார்மேல்வீதி, குருநகர் யாழ்.)

நந்தன் (கந்தசாமி நந்தகுமார் - கந்தர்மடம் - யாழ்.)

ரமேஸ் (தங்கவேலாயுதம் ரமேஸ்குமார் - திருநெல்வேலி தெற்கு -யாழ் )

1987ஆம் ஆண்டு தேசவிரோதிகளால் படுகொலை செய்யப்பட்ட நாட்டுப்பற்றாளர்.

1988ஆம் ஆண்டு சாவகச்சேரி - நுணாவில் பகுதியில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொது மகன்.

1989ஆம் ஆண்டு பருத்தித் துறையில் இந்தியப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 2 தமிழ்ப் பொது மக்கள்.

1990ஆம் ஆண்டு வசாவிளான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

ஜெயா (ம. ரவி - வன்னேரிக்குளம் - கிளிநொச்சி)

யாழ் - நகர்ப்பகுதியில் சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட விமானத்தாக்குதலில் கொல்லப்பட்ட 04 பொதுமக்கள்.

சிறிலங்கா இராணுவத்தால் சுட்டுக்கொலை செய்யப்பட்ட மட்டு - குமாரவேலியார் கிராமம், ஏறாவூர்ப் பகுதிகளைச் சேர்ந்த 02 தமிழ்ப் பொதுமக்கள், மற்றும் நொச்சிமுனை அனுமார் வீதி வாசியான தமிழர்.

1991ஆம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

ராணி (சந்திரயோகினி செல்வநாயகம் - வட்டக்கச்சி - கிளிநொச்சி)

பிலகரி (இரத்தினேஸ்வரி சரவணமுத்து - உருத்திரபுரம்- கிளி - நாச்சி)

கப்டன் அக்சினோ (கலைவாணி இராசரத்தினம் - கைதடி, நுணாவில் - சாவகச்சேரி)

லெப். குணசீலி (சிவராஜி தியாகராஜா - திருநெல்வேலி- யாழ்.)

லெப். மதுரா (வடிவாம்பாள் பரமு - மீசாலை வடக்கு - சாவகச்சேரி)

2-ம் லெப். சலுஜா (ரதீஸ்வரி கணபதிப்பிள்ளை - கரணவாய், கரவெட்டி - யாழ் )

பரிமளா (சந்திரபவானி கந்தசாமி-திருநெல்வேலி-யாழ் )

கல்பனா (அருள்நிதி கனகரட்ணம் - அல்வாய் தெற்கு. கரவெட்டி - யாழ்.)

1992ஆம் ஆண்டு மட்டு - காரைதீவு இடம்பெயர்ந்தோர் முகாமிலிருந்து காணாமல்போன 16 தமிழர்கள்

ஆகியோரை இந்நாளில்

நினைவு கூருகின்றோம்

## தமிழீழ விடுதலைப் புலிகள்.

[கு/7363]

# யாழ். அடைக்கல அன்னை ஆலயம்

# 65-ம் ஆண்டு அபிஷேக நிறைவுவிழா சிறப்பிதழ் 08-09-1993

## "அடைக்கலத்தை நாடிவரும் பக்தர்களின் துயர்துடைத்து அருள்மழை பொழியும் அன்னை"

சகல இனத்தவரும் பேறுடையாள் எனப் போற்றும் மரியன்னைக்கு யாழ் நகர மக்கள் இன்று கல்லால் அமைத்த ஓவியத்தை ஒப்புக்கொடுக்கின்றனர். அடைக்கல அன்னை என்ற பெயரைத்தாங்கி நிற்கும் இவ்வாலயம் வாய்பேசாததாக இருந்த போதிலும், அவளது புகழை ஆற்றலுடன் எடுத்தியம்பும் ஒரு கீதமாக இருக்கின்றது. யாழ் கத்தோலிக்க மக்களினதும் அவர்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்தோரது விசுவாசத்திற்கொரு நினைவுச் சின்னமாகவும் நகருக்கு ஒரு அலங்காரமாகவும் புனித சிற்பக்கலைக்கு ஒரு இணையற்ற எடுத்துக்காட்டாகவும் தனி எழிலுடன் திகழ்கின்றது இவ் ஆலயம்.

### பழைய ஆலயம்

பழைய ஆலயமானது தற்போது வியாகுலமாதவின் செயற்கைக்குகை இருக்கும் அதே இடத்தில் நூறாண்டுகளுக்கு மேல் இருந்து வந்தது ஒல்லாந்தரின் வேதகலாபனைக்குப்பின் முதன் முதல் கட்டப்பட்ட ஆலயங்களுள் இதுவும் ஒன்றாகும். அன்புள்ளம் கொண்ட லே. போ சுவாமியவர்கள் காலத்தில் இது அமைக்கப்பட்டதென்று பாரம்பரியம் கூறுகின்றது. ஆசனக் கோவிலுக்கு அடுத்தபடியாக சிறப்புவாய்ந்த இவ்வாலயம் 1848ஆம் ஆண்டிலிருந்து 1852-ம் ஆண்டு வரை பெற்றக்கினி ஆண்டவர்களால் பிரதி ஆசனக் கோவிலாகப் பயன்படுத்தப்பட்டதோடல்லாமல், யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியும் இவ்ஆலய வளவிற்தான் உதயமானது என்பதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

### புதிய ஆலய வரலாறு

பழைய ஆலயம் பாழடைந்த நிலைமையில் இருந்தமையினால் அப்போதைய பங்குக்குருவாக இருந்த வண. பிதா ஜோண் அலோசியஸின் முயற்சியால் 1907ஆம் ஆண்டில் அந்நாளில் யாழ் ஆயராக இருந்த மகா வந். யூலன் ஆண்டகையவர்களால் புதிய ஆலயத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. அதனைத்தொடர்ந்து சிலகாலத்திற்கு ஆலய வேலைகள் துரிதமாக நடைபெற்றன. ஆலயச்சுவர்கள் சில அடிகள் எழும்பியிருக்கையில் ஆலயப்பணியில் உரமிக்க உடலுழைப்பாளர்களாயிருந்த வண. பிதா அலோசியஸ், திருவாளர்கள் எம். இராஜகாரியர், எம்.பி. சுவாம்பிள்ளை என்ற மூவரும் மரணத்திரையினுள் மறைந்தனர். அதைத் தொடர்ந்து ஏற்பட்ட முதலாம் உலகப் பேரினால் ஏற்பட்ட பொருளாதார மந்த நிலையினால் ஆலயக்கட்டுமானப் பணிகள் நிறுத்தி வைக்கப்படலாயிற்று. அதன் பின்னர் ஆயர் புறோ ஆண்டகையவர்கள் புதிய ஆலயத்தைப் பூர்த்தி செய்யும் பிரமாண்டமான பணியை நிறைவேற்றும் ஆற்றல் படைத்த வண. பிதா ஜென்சி பெருசலை பங்குக்குருவாக நியமித்தார் அதன் பிரகாரம் வெளிநாட்டு உபகாரிகளும், விசுவாசமுள்ள பங்கு மக்களும் பிறரும் தாராளமனத்துடன் அளித்த நிதி உதவிகளால் ஐந்து ஆண்டுகளில் காண்போரின் உள்ளத்தைக் கவரும் வண்ணம் சிற்பக்கலையின் திறனை எடுத்துக்காட்டும் ஒரு எழிலோவியமாக புதியஆலயம் வானளாவ உயர்ந்து நின்றது. 1928ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 8ஆம் திகதி அன்று காலை மகா வந் ஜே ஏ கியோமர் ஆண்டகையவர்களால் பக்திஆசாரத்துடன் அடைக்கலநாயகி ஆலயம் அபிஷேகம் செய்து வைக்கப்பட்டது.

### பங்கும் பணிகளும்

தரும சிமாட்டிகள் என அழைக்கப்படும் புனித வின்சென்ற் டி பவுல் சபை அன்று தொட்டு இன்றுவரை வறிய மக்களின் தேவைகளைக் கவனித்து வருவதுடன் அடைக்கலநாயகி ஆலயத்தின் பக்தி சபைகளும் ஏனைய பங்குச் செயற்பாடுகளும், பங்கு மக்களின்-சிறப்பாக இளைஞரின் ஆன்மீகஒழுக்க மதிப்பீடுகளை கட்டியெழுப்ப பெரிதும் துணைபுரிகின்றன.

தற்போது குடாநாட்டில் ஏற்பட்டுள்ள யுத்த சூழ்நிலையினாலும், தொழில் காரணமாகவும் எமது பங்கைச் சேர்ந்த பல குடும்பங்கள் யாழ். மாவட்டத்தை விட்டு வெளியேறி இலங்கையின் பிறபாகங்களுக்கும், வெளிநாடுகளுக்கும் சென்று விட்ட இவ்வேளையில் பங்குத்தந்தை அவர்களுடன் தொடர்பு கொண்ட தன் பேரில் வெளிநாட்டு உபகாரிகளும், விசுவாசமுள்ள பங்கு மக்களும், ஏனையோரும் தாராள மனத்துடன் அளித்த நிதி உதவிகளாலும், பங்குத் தந்தையின் ஊக்கத்தினாலும், விடா முயற்சியினாலும் ஒரு மாத காலத்தினுள் இவ்வாலயம் புதுப்பொலிவுடன் இவ் விழாவைக் காண்பது ஒரு சிறப்பம்சமாகும்.

பக்தியுள்ள கத்தோலிக்க மக்கள் இதுவரை போற்றிப் பாதுகாத்து வந்துள்ள ஒழுக்கநெறிகள் விரைவாக மாறிக் கொண்டு வரும் இக்காலகட்டத்தில் பங்கு மக்கள் வாழ்க்கையில் உடனடியாக ஒரு மறுமலர்ச்சி ஏற்பட வேண்டும் என்ற நோக்குடன் பங்குத் தந்தை சகல முயற்சிகளையும் மேற்கொண்டு வரும் இந்நாளில் தனது அன்பையும் அடைக்கலத்தையும் நாடி வரும் பக்தர்களின் துயர்துடைத்து அருள்மழை பொழிந்துவரும் பரலோக அன்னையின் மட்டில் பிள்ளைக்குரிய பக்தியும், நன்றியறிதலும் கொண்டு நமது வாழ்க்கையை அவளுக்கு அர்ப்பணிப்போமாக. பங்கு மக்களும், பக்தர்களும் இவ்விழா திறமே நிறைவேறும் பொருட்டு தாராள மனத்துடன் உழைப்போம். அன்னையின் ஆசீர் பல் அனைவரையும் அரவணைப்பதாக.



"படைக்கலமாக வைத்தோம்!"

அடைக்கலமான உன் பெயரை அம்மா
படைக்கலமாக எம் நாவில் வைத்தோம்
இணைக்கரம் தந்து நீ ளா வடில்
அணைத்தெமைக் காப்பவர் யாரோ- அம்மா.

### யாழ் மறைக் கோட்ட முதல்வரின் ஆசிச் செய்தி

யாழ் நகரின் மத்தியில் அறுபதைந்து ஆண்டுகள் நிறைவை பொலிவுடனும், பெருமையுடனும் கொண்டாடும் அடைக்கல அன்னையின் விழாவையொட்டிய நினைவு மலரில் அதே பங்கைச் சேர்ந்த பங்கு மகன் என்ற மட்டில் எனது நல் வாழ்த்துக்களை வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

அனைவரையும் அணைத்துக் கொள்ளும் அன்னையின் ஆலயம் இன்று புதுப் பொலிவுடன் மிளிர்வதை, இறைமக்கள் விசுவாச வாழ்வின் வளர்ச்சியை வழிபாடுகளும், வாழ்க்கையும் எடுத்துக் காட்டுகின்றது.

### பங்குத் தந்தையின் ஆசியுரை

அனைவரையும் அரவணைக்கும் யாழ்/ அடைக்கல அன்னையின் ஆலயம் அழகும், பொலிவும் நிறைந்து காட்சியளிப்பது எம் உள்ளத்திற்கு பெருமகிழ்ச்சியூட்டுகின்றது. ஆர்வமிக்க பங்கு மக்களின் தாராள உள்ளத்தால் ஆலயம் என்றுமே அணையா விளக்காய் சுடர் விட்டுத் திகழ்கின்றது.

விசுவாச வளர்ச்சி பெற்று பல பக்திச் சபைகளைக் கொண்டு விளங்கும்

அடைக்கல அன்னையின் அருளை
வேண்டுகிறோம்.

எஸ். எம். நகை மாளிகை
645 (167), ஆஸ்பத்திரி வீதி, யாழ்நகர்.

நியூமலாயன் உணவகம்
625, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

ரட்ணா ஸ்ரோர்ஸ் அன் கபே
718, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

ஜெயபிரதா நகை மாளிகை
175A, கஸ்தூரியார் வீதி, யாழ்நகர்.

லைடன் புடைவை நிலையம்
249, மின்சார நிலைய வீதி, யாழ்நகர்.

அடைக்கல அன்னையே
அருள் தருமம்மா

அன்ரன் லக்ஷா நகைப்பூங்கா
187, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

பிரிமியர் பேக்கரி
73, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

ஞானமஸ் உல்லாச விடுதி
புகைப்பட நிலையம்
299, மணிக்கூட்டுகோபுர வீதி, யாழ்நகர்.

வைஜி மெடிக்கல்ஸ்
520, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

645 (167), ஆஸ்பத்திரி வீதி, யாழ்நகர்.

நியூமலாயன் உணவகம்
625, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

ரட்ணா ஸ்ரோர்ஸ் அன் கபே
718, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

ஜெயபிரதா நகை மாளிகை
175A, கஸ்தூரியார் வீதி, யாழ்நகர்.

லைடன் புடைவை நிலையம்
249, மின்சார நிலைய வீதி, யாழ்நகர்.

நதியா நகை மாளிகை
02, கஸ்தூரியார் வீதி, யாழ்நகர்.

த. இராசையா அன் சன்ஸ்
23/10, அர்ச்சனா வீதி, யாழ்ப்பாணம்.

நியூ ராதிகா நகை மாளிகை
189, கஸ்தூரியார் வீதி, யாழ்நகர்.

ஆர். கே. அன் சன்ஸ்
129, அர்ச்சனா வீதி, யாழ்ப்பாணம்.

செல்லையா சிவபாதலிங்கம்
191H, கஸ்தூரியார் வீதி, யாழ்நகர்.

சிற்றி மெடிக்கல்ஸ்
487, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

ஈஸ்வரி நகை மாளிகை
177, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

மரீனா ரெக்ஸ்
30, கஸ்தூரியார் வீதி, யாழ்நகர்.

நித்தியா நகை மாளிகை
177/4, கஸ்தூரியார் வீதி, யாழ்நகர்

லக்கி ரெக்ஸ்ரைல்ஸ
182, நவீன சந்தை உட்புறம், யாழ்நகர்.

லலிதா நகை மாளிகை
213, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


அடைக்கலமான உன் பெயரை அம்மா
படைக்கலமாக எம் நாவில் வைத்தோம்
இணைக்கரம் தந்து நீ ளா வடில்
அணைத்தெமைக் காப்பவர் யாரோ- அம்மா.

யாழ் மறைக் கோட்ட முதல்வரின்

## ஆசிச் செய்தி

யாழ் நகரின் மத்தியில் அறுபதிலைந்து ஆண்டுகள் நிறைவை பொலிவுடனும், பெருமையுடனும் கொண்டாடும் அடைக்கல அன்னையின் விழாவையொட்டிய நினைவு மலரில் அதே பங்கைச் சேர்ந்த பங்கு மகன் என்ற மட்டில் எனது நல் வாழ்த்துக்களை வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

அனைவரையும் அணைத்துக் கொள்ளும் அன்னையின் ஆலயம் இன்று புதுப் பொலிவுடன் மிளிர்வதை, இறைமக்களின் விசுவாச வாழ்வில் வளர்ந்தை வழிபாடுகளும், வாழ்க்கையும் எடுத்துக் காட்டுகின்றது.

''அம்மா என்று அழைக்காத உயிர் இல்லையே. அம்மாவை எண்ணாமல் உயர் வில்லையே''. தொடர்ந்து அன்னையின் பரிந்துரை பங்கு மக்களாகிய உங்கள் அனைவர் மேலும், அன்னையை அயராது அண்டிவரும் பக்தர்கள் மேலும் நிறைவாக இருக்கவேண்டுமென்று எனது செபத்தோடு கூடிய நல்லாசிகள்.

இவ்வாண்டு இவ்வாலயத்தின் 65ஆம் ஆண்டு நிறைவு மகிழ்வில் அக்களிக்கும் பங்குத் தந்தைக்கும், பங்கு மக்கள் அனைவர்க்கும் எனது நல்வாழ்த்துக்களும், இறையாசீரும் உரித்தாகுக.

அருட்திரு அன்ரன் ரி. இராஜநாயகம்
பேராலய பங்குத் தந்தை

## பங்குத் தந்தையின் ஆசியுரை

அனைவரையும் அரவணைக்கும் யாழ்/ அடைக்கல அன்னையின் ஆலயம் அழகும், பொலிவும் நிறைந்து காட்சியளிப்பது எம் உள்ளத்திற்கு பெரு மகிழ்ச்சியூட்டுகின்றது. ஆர்வமிக்க பங்கு மக்களின் தாராள உள்ளத்தால் ஆலயம் என்றுமே அணையா விளக்காய் சுடர் விட்டுத் திகழ்கின்றது.

விசுவாச வளர்ச்சி பெற்று பல பக்திச் சபைகளைக் கொண்டு விளங்கும் இவ்வாலயம் முதிர்ச்சி பெற்ற கிறிஸ்தவர்களை உருவாக்கும் என்பதில் ஐயமில்லை. ஆலயத்தை அழகுறக் கட்டியெழுப்ப அயராது உழைத்த அருள் தந்தை பெருசல் அ.ம.தி. அடிகளாரையும், அவரைத் தொடர்ந்து அரும் பணியாற்றிய அனைத்து பங்குத் தந்தையர்களையும் நாம் நன்றியோடு நினைவு கூருகின்றோம் எமது ஆலயத்தின் அறுபத்தைந்தாம் ஆண்டிலே அன்னையை நாடிவரும் அனைவருக்கும் ஆண்டவனின் அருள் மழை பொழிந்திட வேண்டி வாழ்த்துகின்றோம்.

அருள் திரு ஜே. நீக்கிலஸ்
பங்குத்தந்தை.

## பங்குத் தந்தையர்கள்

இப்பங்கில் பணியாற்றி இன்றைய தலைமுறையினரை உருவாக்கிய குரு இலகப் பெருந்தகையோர்,

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| அருள்திரு | மாஜதிம் | அ. ம. தி | 1909ஆம் | ஆண்டிலிருந்து | 1914 | வரை |
| அருள்திரு | பரோன் | ,, | 1914ஆம் | ,, | 1923 | ,, |
| ,, | எச் பெருசல் | ,, | 1923ஆம் | ,, | 1929 | ,, |
| ,, | ஜே. எவ் சேவியர் | ,, | 1929ஆம் | ,, | 1945 | ,, |
| ,, | எஸ் வெந்தர்கோன் | ,, | 1945ஆம் | ,, | 1948 | ,, |
| ,, | ஏ உவில்லியம் யேசுதாசன் | ,, | 1948ஆம் | ,, | 1955 | ,, |
| ,, | எஸ் ஏ சுவாம்பிள்ளை | ,, | 1955ஆம் | ,, | 1960 | ,, |
| ,, | என் ஜோசவ் | அ. ம. தி | 1960ஆம் | ,, | 1970 | ,, |
| ,, | பீ. சூசைப்பிள்ளை | ,, | 1970ஆம் | ,, | 1973 | ,, |
| ,, | பீ. சந்தியாப்பிள்ளை | ,, | 1973ஆம் | ,, | 1977 | ,, |
| ,, | எஸ் ஈ.என். இமானுவேல் | ,, | 1977ஆம் | ,, | 1978 | ,, |
| ,, | ஏ சேவியர் குருஸ் | ,, | 1978ஆம் | ,, | 1981 | ,, |
| ,, | ஈ ஜே அருளைநாயகம் | ,, | 1981ஆம் | ,, | 1986 | ,, |
| ,, | பிலிப் பொன்னையா | ,, | 1986ஆம் | ,, | 1991 | ,, |
| எல் | வி. பி மங்களராஜா | ,, | 1991ஆம் | ,, | 1993 | ,, |

அருள் திரு ஜே. நீக்கிலஸ் அவர்கள் 1993ஆம் ஆண்டு ஆனி மாதம் 18ஆம் திகதி முதல் பங்குத்தந்தையாக பணியாற்றிவருகிறார்.


எஸ். எம். பேர்னான்டோ
580, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(இலங்கை வங்கி அருகில்) (B-7361)

அன்ரன் லக்ஷா நகைப்பூங்கா
187, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

பிரிமியர் பேக்கரி
73, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

ஞானமஸ் உல்லாச விடுதி
புகைப்பட நிலையம்
299, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்நகர்.

வைஜி மெடிக்கல்ஸ்
520, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

நியூ லலிதா நகை மாளிகை
74/1, கஸ்தூரியார் வீதி, யாழ்நகர்

பிராங் எம்போறியம்
16, (33) கஸ்தூரியார் வீதி, யாழ்நகர்.

நகுலா நகை மாளிகை
170 B, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

வெள்ளை மாளிகை
(அந்தியகால சேவை)
180, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

சிறிஅமலா நகை மாளிகை
74/1, கஸ்தூரியா வீதி, யாழ்நகர்

ஒளி இல்லம்
(அந்தியகால சேவை)
210 பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

வீனஸ் தங்க மாளிகை
185, கஸ்தூரியா வீதி, யாழ்நகர்.

வி. பேரின்பராசா
234/2, கஸ்தூரியார் வீதி, யாழ்நகர்.

தீபா நகையகம்
177/2, கஸ்தூரியார் வீதி, யாழ்நகர்.

இந்திரா நகையகம்
181, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

அச்சனா நகை மாளிகை
120 B, கஸ்தூரியார் வீதி, யாழ்நகர்.

ஜெயசித்திரா நகை மாளிகை
177 D, கஸ்தூரியா வீதி, யாழ்ப்பாணம்.

# அளவெட்டி ஸ்ரீ நாகவரத நாராயணர் ஆலய ரதோற்சவ மலர் 08. 09. 1993

## பிரதம குருவின் ஆசியுரை

இத்தலம் இருநூறு வருடங்களுக்கு மேலான பழமையானது கண்ணன் இரு பாம்புகளாகவும் இளம் சிறுவனாகவும் இளம் சிறுமியாகவும் காட்சி காட்டிக் கோவில் கொண்டான். கேணியடி நாகதம்பிரான் என மக்கள் வழிபட்டனர் ஆண்டு தோறும் ஆவணி ரோகிணியில் பொங்கல் விழா நடந்தது 14-2-1953இல் தம் அடியான் ஒருவனுக்குக் கனவில் தோன்றி "என்னை ஆதரித்தால் உன்னை ஆதரிப்பேன்" என்று வாக்குரைத்தவண்ணம் இவ்வாலயம் வளர்ந்தது 8.9-1979இல் ஸ்ரீ நாகவரத நாராயணமூர்த்திக்கு முதலாவது கும்பாபிஷேகம் நிகழ்ந்தது 27 8 1986இல் தேர்த்திருவிழா ஆரம்பமானது.

எம்பெருமான் திருவருளால் இறந்தபாலன் உயிர் பெற்றமை முதலாய பற்பல அற்புதங்களையும் புரிந்து தம் அடியார்க்கெல்லாம் வேண்டும் வரங்கள் கொடுத்து அருள்மழை சொரிந்து வீற்றிருக்கின்றார்.

இவ்வாண்டும் (8 9 93 புதன்கிழமை) எம்பெருமான் பாரதம் வென்ற வெற்றித்தேரிலே பவனிவருகின்ற காட்சியானது இன்று அடியார்களுக்கு ஏற்பட்டுள்ள இடர் களைய எழுந்தருளியது போன்றதே பெருமான் திருக்கரத்திலிருக்கும் ஸ்ரீசக்கரம் எமைக்காக்கும். கோவர்த்தன குன்றேந்தி கோகுலத்தைக் காத்த பிரான் எமைக்காப்பான் திரௌபதைக்கு துகில் கொடுத்த மாயக்கண்ணன் எம் அன்னையர் மானம்காப்பான். மூவடியால் மூவுலகளந்த மாயன் திருவடி எமக்கு அமைதி வழி சமைக்கும் மெய்யடியார்கள் அனைவரும் திரண்டு வந்து வெற்றித்தேர் பவனி கண்டு இட்டசித்திகளை பெற்றேகும் வண்ணம் ஆசி கூறுகின்றேன்

ப்ரபன்ன பாரிஜாதாய தோத்ர வேத்ரைக பாணயே
ஞான முத்ராய கிருஷ்ணாய கீதாம்ருததுஹே நம!

சுபமஸ்து

இங்ஙனம்
ஆலய பிரதமகுரு
சிவஸ்ரீ கி. உருத்திர புவரேஸ்வர சிவாச்சாரியர்


ஸ்ரீ நாகவரத நாராயணர்
சித்திரத் தேரூர்க!

"ஜீவாகாரம்" தயாரிப்பாளர்கள்
அண்ணா தொழிலகம்
இணுவில்


## "நாகேஸ்வரத்தில் வெண்ணெய் பிரசாதம் வழங்கும் பெருமாள் தேரில் வருகிறார்!"

"கொச்சையர் மனையினில் இடைச்சியர் தயிர்தனை
நச்சியே திருடிய — குறையால் வீழ்
குற்கிர வினியொடு நற்திற வகையறி
கொற்ற உவணமிசை — வருநேசன்"

என்று அருணகிரி சுவாமிகள் "கச்சணி" என்று தொடங்கும் திருப்புகழில் கண்ணனைவர்ணிக்கிறார் கண்ணன் யாதவர்களின் வீடுகளில் கோபிகைகளின் தயிரை விரும்பித் தயிரைத் திருடியதற்காக உரலோடு கட்டுப்பட்டான். கட்டுப்பட்ட உரலை இழுத்தான் அப்போது சாபம் பெற்று மருதமரங்களாக நின்ற இரு தேவர்களும் விமோசனம் பெறவைத்தான்- என்பது இத்திருப்புகழ்ப் பகுதியின் பொருளாகும்.

கண்ணன் துவாபர யுக முடிவில் தேவகி வயிற்றில் திருவவதாரம் செய்து ஆயர்பாடியில் யசோதை மகனாக வளர்ந்தவர், முற்பிறப்பில் தாருகவனத்து முனிவர்களாகவும், தண்டகவனத்து முனிவர்களாகவும் இருந்து தவம் செய்தவர்கள் கோபியர்கள் அவர்களைப் பூவுலகு வரவழைத்தவர் கண்ணபிரான். ஆதலால், அவர்கள் உள்ளங்கவர் கள்வனாக கண்ணபிரான் சென்று கோபியர்களின் உள்ளத்தையும் தயிரையும் களவுசெய்தருளினார்

இரட்டையர் (புலவர்கள்) — மாயனை "நெய்திருடி" என்று குறிப்பிடுகிறார்கள் — வெண்ணெய்— நெய்யாகிறது.

உள்ளமாகிய பாலிலுள்ள தீயவினைகளாகிய நீர் வற்றுவதற்கு ஞானமாகிய ...



நிலைத்து நின்று அன்பு என்ற மத்தினால் அறிவு என்ற கயிற்றைக் கொண்டு கடைந்தால் திருவருளாகிய வெண்ணெய் வெளிப்படும். அந்த வெண்ணெயை— தானே ஏற்றுக் கொண்டு பக்தருக்குப் பரமபதம் கொடுக்கி...

இது சிறந்த வரலாற்றை விளக்குகிறது— உறி திருடிய கண்ணபிரானை உரலோடு கட்டுவதற்கு, யசோதை தயம்மா, தாம்புக் கயிற்றை எடுத்து வந்து கண்ணனின் வயிற்றிலே கட்டினாள். கயிறு ஒரு சாண் போதாமலிருந்...

மேற்படி திருப்புகழிலே 'நல் திறவகையறி' என்ற தொடர் வருகிறதல்லவா,

முடிந்தாளி. அதுவும் போதாது. வேறு கயிற்றை முடிந்தாள் அப்போதும் சரிவரவில்லை. தாயாருடைய அன்புக்காக— கண்ணன் தன் வயிற்றைச் சிறிது சுருக்கிக் கொண்டு கட்டுக்கடங்கினார். கயிற்றினால் கட்டப்பட்டமையால் 'தாமோதரன்' என்ற பெயரைப் பெற்றார்.

கட்டுப்பட்டவர் உரலை விழுத்தி— கட்டிய கட்டுடன் தவழ்ந்தார். நாரதர் சாபத்தால் நளகூபன், மணிக்கிரீவன என்ற குபேரன் மக்களிருவரும் அங்கே மிக நெருக்கமான மருதமரங்களாய் நின்றனர் உரலை இழுக்க முடியாமல் மரங்கள் தடுத்தன. மரங்களைத் திருப்பாதத்தால் உதைந்தார். உடனே அவர்கள் சாபம் நீங்கிச் சொந்தவடிவெடுத்தனர். இதனையே 'நற்றிறவகையறி' என்ற தொடர் பொருளாகக் காண்கிறோம்.

அளவெட்டி நாகேஸ்வரம்— ஸ்ரீ நாகவரதப் பெருமான தேர்த்திருவிழாத் தினமான இன்று (8. 9. 93) மாலை உறியடி உற்சவத்தின்போது குழந்தைக் கண்ணனாக வந்து, உறி திருடி, அடியார்களுக்கு வெண்ணெய்ப் பிரசாதம் வழங்கும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். அடியார்கள் அனைவரும் பங்குபற்றி நலம் பெறுவார்களாக குழந்தையாகக் காட்சி காட்டிக் கோயில் கொண்ட பெருமான் குழந்தையாகவும், ஸ்ரீதேவி-பூமிதேவிநாயனாக


ஒன்றும் அறியாத ஊமர்காள் தென்னரங்கன்
இன்று திருத்தேரில் ஏறினார் - நின்று
வடம்பிடிக்க வாருங்கள் வைகுந்தநாட்டில்
இடம்பிடிக்க வேண்டும் எனின்

க. கு. கந்தையாபிள்ளை
அன் சன்
124. 818, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

கஜலக்ஷ்மி ஜுவல்லர்ஸ்
470, கே. கே. எஸ். வீதி, கோண்டாவில்.

கயல்விழி நகைப்பூங்கா
தங்கப்பவுண் நகைவியாபாரம்
224B. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

சீமாட்டி ஜவுளி சமுத்திரம்
122, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

லீலா பேக் ஹவுஸ்
சந்தை சதுக்கம், சங்கானை,
கிளை: சிரணி, சண்டிலிப்பாய்.

எஸ்.எம். பெர்னான்டோ
580, ஆஸ்பத்திரி வீதி,
(இலங்கை வங்கி அருகில்)
யாழ்ப்பாணம்.

களை பெற்றேகும் வண்ணம் ஆசி கூறுகின்றேன்

ப்ரபன்ன பாரிஜாதாய தோத்ர வேத்ரைகபாணயே
ஞான முத்ராய கிருஷ்ணாய கீதாம்ருததுஹேநம!

சுபமஸ்து

இங்ஙனம்
ஆலய பிரதமகுரு
சிவஸ்ரீகி. உருத்திர புவரேஸ்வர சிவாச்சாரியார்


ஸ்ரீ நாகவரத நாராயணர்
சித்திரத் தேரூர்க!

''ஜீவாகாரம்'' தயாரிப்பாளர்கள்
அண்ணா தொழிலகம்
இணுவில்

ராஜா மருந்துக்கடை
கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்.

மங்கை சில்க்ஸ்
8, மத்திய சந்தை, சுன்னாகம்.

நகுலா ஜுவல்லறி
தங்கப்பவுண் நகை வியாபாரம்
170B, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

வீ. எம். கே. ஜுவலர்ஸ்
கண்டிவீதி, சாவகச்சேரி.

அர்ச்சனா நகை மாளிகை
120B, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

ஜெயா அழகுசாதன மாளிகை
177,A மின்சாரநிலைய வீதி,
கிளைகள்:
ஜெயா பென்ஸி ஹவுஸ்
160. நவீனசந்தை உடபுறம்
ரேகா அழகுசாதன விற்பனை நிலையம்
25, 48, பெரியகடை, யாழ்ப்பாணம்.

வசந்தி எலெற்றிக்கல்ஸ்
110, கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்.

மகாராணி றெக்ஸ்ரைஸ்ல்ஸ்
50, பெரியகடை, யாழ்ப்பாணம்.

கி. சிலுவைதாஸன் ஜே. பி.
18, மத்தியகிழக்கு வீதி, றெக்கிளமேஷன்,
யாழ்ப்பாணம்.


வும், தண்டகவனத்து முனிவர்களாகவும் இருந்து தவம் செய்தவர்கள்கோபியர்கள் அவர்களைப் பூவுலகு வரவழைத்தவர் கண்ணபிரான். ஆதலால், அவர்கள் உள்ளங்கவர் கள்வனாக கண்ணபிரான் சென்று கோபியர்கள் உள்ளத்தையும் தயிரையும் களவுசெய்தருளினார்

இரட்டையர் (புலவர்கள்) — மாயனை ''தெய்விருடி'' என்று குறிப்பிடுகிறார்கள் — வெண்ணெய்— நெய்யாகிறது.

உள்ளமாகிய பாலிலுள்ள தீயவினைகளாகிய நீர் வற்றுவதற்கு ஞானமாகிய நெருப்பை மூட்டிக் காய்ச்சி, பக்குவமாகிய இளஞ் சூட்டில், ஐந்தெழுத்து மந்திரமாகிய உறை (பிரை) யிட்டு மன உறுதியாகிய உறியிச் சேமித்து வைத்து— அசையாத நிருவிகற்ப சமாதியில்



நிலைத்து நின்று அன்பு என்ற மத்தினால் அறிவு என்ற கயிற்றைக் கொண்டு கடைந்தால் திருவருளாகிய வெண்ணெய் வெளிப்படும். அந்த வெண்ணெயை— தானே ஏற்றுக் கொண்டு பக்தருக்குப் பரமபதம் கொடுக்கிறார் பரமாத்மா. இப்படித்தான் என் அன்படியவர்க்குப் பரகதி கொடுக்கிறேன் என்ற கருத்துப்படவே, தான் திருடிய வெண்ணெயைத் தன்தோழர்களுக்கும் கொடுப்பதாக நடிக்கிறார்.

இது சிறந்த வரலாற்றை விளக்குகிறது— உறி திருடிய கண்ணபிரானை உரலோடு கட்டுவதற்கு, யசோதையம்மா, தாம்புக் கயிற்றை எடுத்து வந்து கண்ணனின் வயிற்றிலே கட்டினாள். கயிறு ஒரு சாண் போதாமலிருந்தது. வேறு கயிற்றை

றோம்.

அளவெட்டி நாகேஸ்வரம்— ஸ்ரீநாகவரதப் பெருமான தேர்த் திருவிழாத் தினமான இன்று (8. 9. 93) மாலை உறியடி உற்சவத்தின்போது குழந்தைக் கண்ணனாக வந்து, உறி திருடி. அடியார்களுக்கு வெண்ணெய்ப் பிரசாதம் வழங்கும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். அடியார்கள் அனைவரும் பங்கு பற்றி நலம் பெறுவார்களாக. குழந்தையாகக் காட்சி காட்டிக் கோயில் கொண்ட பெருமான் குழந்தையாகவும், ஸ்ரீதேவி-பூமிதேவிநாயகனாகவும் காட்சிதருகிறார்.

அருட்கவி சீ. விநாசித்தம்பி
(ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம்)

மலராக்கம்:
தம்பிராசா பரமலிங்கம்

## 'இன்ப வாழ்வு தருவாய்'



குண்டலம் இரண்டோடு குலவுசடை முடிமிளிர
 குளிர்கமல வாயரும்ப,
குலவுகௌத் துவமணியும் துளசிமணி மாலைகளும்
 கோலமார் பினில் விளங்க,
தண்டுகம லமதிகிரி சங்குநாற் கரமேவித்
 தண்ணருள் மழை வழங்க,
சாந்தமங் களநீல வண்ண னாய்த் திருமகள்
 தழுவுவல மும்புவனியாள்
கொண்டிடம திகழவும் பணி அரவமாய் அளவை
 கூடுநா கேஸ் வரத்தின்
கோயிலுறை அரிநாக வரதநா ராயணா
 குறை நீக்கும் கண்ணழகனே
வண்டுறையும் நினபாத மலரிணையை எம் தலையில்
 வைத்துஇன்ப வாழ்வு தருவாய்
மன்னும் ஆவணிக கிருஷ்ண ஐயநதிரதம் ஏறிவரும்
 மாதவ மகா தேவனே.

- ''அளவையூர் சஞ்சீவி''




பாற்கடலிற் பள்ளி கொண்டு படியளக்கும் திருவரங்கா!
நாற்புரவித் தேரினிலே நற்கீதை சொன்னவனே!
தேர்ரதம் ஏறிவந்து எம்மைக் காருமையா!

புஸ்பா அன் கம்பனி

292, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

[சி-7364]



[illegible]
122, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

லீலா பேக் ஹவுஸ்
சந்தை சதுக்கம், சங்கானை,
இளை:
சிரணி, சண்டிலிப்பாய்.

எஸ்.எம். பெர்னான்டோ
580, ஆஸ்பத்திரி வீதி,
(இலங்கை வங்கி அருகில்)
யாழ்ப்பாணம்.

சிற்றி என்ரப்பிறைஸ்
இணுவில்

லிங்கம் கூல் பார்
52, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.

ஸ்ரீ விக்னேஸ்வரா களஞ்சியம்
148, கண்டி வீதி, சாவகச்சேரி.

அசோகா ஆபரண மாளிகை
275, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

அருணா ஆபரண மாளிகை
177B, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

விக்னேஷ் றெக்ஸ்
45 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

யோகாஸ் புடைவை மாளிகை
16B, பெரியகடை, யாழ்ப்பாணம்.

சிந்தனைக்கு

வசந்த காலத்தில் ஒரு மரத்தில் இளம் மொட்டுக்கள் இருந்தால் ஒழிய, இலையுதிர் காலத்தில் அதில் கனிகளைக் காண்பது அரிது.

- அகஸ்டஸ் ஹேர் ஜூலியஸ் ஹேர்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 08-09-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2028
க. பெ. எண்-05

## தலைவலிக்காக...

இரண்டாம் கட்ட ஈழப்போர் 1990இல் ஆரம்பமாகிய பின்னர் சிறிலங்கா ஆயுதப் படையின் கட்டளையிடும் உயர் அதிகார மட்டத்தில் நான்காவது தடவையாக மாற்றம் கொண்டு வரப்பட்டது. 1990இல் போர் ஆரம்பமாகி சில மாதங்களின் பின் முதலாவது மாற்றம் இடம்பெற்றது. இதன்பிரகாரம், கூட்டுப்படை நடவடிக்கைத் தலைமையகம் மீண்டும் உருவாக்கப்பட்டு முப்படைத் தளபதிகளிடமும் இருந்த அதிகாரங்கள் பல அதற்கு வழங்கப்பட்டன.

இரண்டாவது மாற்றம், 1992இல் மார்ச்சில் இடம்பெற்றது. இதன்பிரகாரம், கூட்டுப்படை நடவடிக்கைத் தலைமையகத்திடம் இருந்த பல அதிகாரங்கள் முப்படைத் தளபதிகள் மற்றும், பொலிஸ் மா அதிபர் கைக்கு மாறியது. ஆனால், 1992 ஒக்டோபரில் மீண்டும் அதிகாரங்கள் கூட்டுப்படை நடவடிக்கைத் தலைமையகத்திற்கே ஒப்படைக்கப்பட்டன. இறுதியாக, மாற்றம் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இம்மாற்றம் கூட்டுப்படை நடவடிக்கைத் தலைமையகத்தைக் கலைத்ததோடு புதிய அமைப்பு ஒன்றையும் உருவாக்கியுள்ளது.

இராணுவத் தோல்விகளின் காரணமாக அதிகாரிகள் பதவி விலகுவதும் அல்லது விலக்கப்படுவதும் பொதுவான ஒன்றுதான். அந்த வகையில், சிறிலங்காவின் ஆயுதப்படை அதிகாரிகளின் பதவி நிலை மாற்றங்கள், அதிகார மாற்றங்கள் ஏற்படுகின்றமையும் புதியதொன்றல்ல ஏனெனில், சிறிலங்கா ஆயுதப்படை எதிர்கொள்ளும் தொடர்ச்சியான தோல்விக்கு உயர் அதிகாரிகள் தார்மீகப் பொறுப்பு ஏற்காவிடில் வேறு வழி இல்லை. ஆனால், அதிகாரிகள் மட்டத்தில் பெரும் மாறுதல்கள் செய்யாமல், சிறிதளவு அதிகார மாற்றத்துடன் கூடிய ஆயுதப் படையின் கட்டளையிடும் அமைப்பு முறையை அடிக்கடி மாற்றுவது சிறிலங்காவிற்கே உரிய சிறப்பம்சமாகும்.

இந்நிலையானது, சிறிலங்கா அரசாங்கமானது அண்மைக்கால தோல்விகளை ஜீரணித்துக்கொள்ள முடியாமையால் தவிப்பதை வெளிப்படுத்துவதாகவே உள்ளது. ஆகையினால்தான் போரில் எவ்வாறேனும் வெற்றி பெற்றுவிட வேண்டும் என்ற நோக்கில் கட்டளை இடும் அமைப்பை அடிக்கடி

## இனப்பிரச்சினைத் தீர்வில் அரசாங்கம் குழம்பியுள்ளது.

### கொழும்பு அரசியல் விமர்சகர் கருத்து

(கொழும்பு)

தனிப்பட்ட முறையில் கட்சி உறுப்பினர்கள் எவரும் யோசனைகளை முன்வைக்கக்கூடாது என்று ஐ.தே.க. உயர்பீடம் சுற்றறிக்கை ஒன்றின் மூலம் கோரிக்கை விடுத்திருப்பதாக கூறப்படுகின்றது. அதே சமயம் ஐ.தே.க. உயர்பீடத்தில் இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வோ அல்லது அரசியல் தீர்வோ காண்பது என்பதில் எவ்விதமான தெளிவான கருத்துக்களும் இல்லை என்று சண்டே ரைம்ஸ் பத்திரிகையின் அரசியல் விமர்சகர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் இந்த விடயத்தில் ஐ.தே.கவும் சுதந்திரக்கட்சியும் ஒரேமாதிரியான போக்கையே கடைப்பிடிப்பதாகவும் அவை இரண்டும் பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் முன்பாகக் கூட ஒரு யோசனையை முன்மொழியாதது துக்ககரமானதே என்றும் தெரியப்படுத்தியுள்ளார்.

அத்துடன் அரசியல்வாதிகள் தமது இறுதி இலக்கு என்ன என்பது குறித்து தெளிவாக இல்லாத இந்த நிலைதான் இராணுவத்தினர் மத்தியில் குழப்பங்களுக்கு காரணமாகிறது என்றும், தள நிலைமைகளில் அது பிரதிபலிக்கின்றது என்றும் தெரிவித்துள்ளார்.

## விடைத்தாள்கள் எடுத்துச் செல்லப்படும்

(யாழ்ப்பாணம்)

தேசிய ஆங்கில பத்திரத்திற்கான பரீட்சை மற்றும் நேற்று முன்தினம் நடைபெற்ற மக்கள் வங்கிப்பரீட்சை ஆகியவற்றின் விடைத்தாள்கள் பரீட்சைத்திணைக்களத்திற்கு எடுத்துச் செல்ல யாழ் கல்வித்திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

மேற்படி பரீட்சைகளின் விடைத் தாள்களின்பரீட்சைத் திணைக்களத்தில் இருந்து இம்முறை யாழ்ப்பாணம் வந்த பரீட்சிணைக்கள அதிகாரியே தம்முடன் எடுத்துச் செல்கின்றார்.

நேற்று பருத்தித்துறை இறங்குதுறையில் பொருள்களை இறக்கிக் முடித்த "ருகுணு" கப்பலிலேயே இவை எடுத்துச் செல்ல ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன. (பா)

## வைத்தியசாலை கொள்கலன் கொழும்பில் திறக்கப்பட்டது

(நமது நிருபர்)

பிரிட்டன் அரசினால் யாழ் போதனா வைத்தியசாலைக்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட மருத்துவ உபகரணங்கள் அடங்கிய கொள்கலன்களில் இரண்டு தற்சமயம் கொழும்பில் தங்கியுள்ள யாழ். போதனா வைத்தியசாலை அதிகாரியினால் திறக்கப்பட்டுள்ளன.

இவ் இரண்டு கொள்கலன்களுக்குள்ளும் அம்புலன்ஸ் ஒன்றும் மெத்தைகளும் அடங்குகின்றன என யாழ். போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் நமது செய்தியாளருக்கு தெரிவித்தன.

அடுத்த கட்டமாக மற்றைய கொள்கலன்களும் திறக்கப்பட்ட பின்னர் பொருள்களின் அத்தியாவசிய தேவை அடிப்படையில் கட்டம் கட்டமாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்து வரப்படவுள்ளனமேலும்அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. (சி) (பா)

## மைலங்காடு வி.க வெற்றியீட்டியது

(மானிப்பாய்)

மயிலங்காடு விளையாட்டுக் கழகத்துக்கும் ஏழாலை முத்தமிழ் மன்ற விளையாட்டுக் கழகத்திற்கும் இடையில் நடைபெற்ற கைப்பந்தாட்டப் போட்டியில் மையிலங்காடு விளையாட்டுக்கழகம் வெற்றியீட்டியுள்ளது.

### கூட்டம்

யாழ்ப்பாண கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் இன்று காலை 9.30 மணியளவில் யாழ்ப்பாண இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

# சபாநாயகரின் குற்றச்சாட்டு மிகவும் பாரதூரமானது

## -காமினி ஜயசூரிய தெரிவிப்பு

[கொழும்பு]

வடக்கு, கிழக்கு யுத்தம் தொடர்ந்து நடப்பதை அதனால் பொருளாதார லாபமீட்டும் சில சக்திகள் ஊக்குவிப்பதாக சபாநாயகர் எம். எச். முகமது தெரிவித்திருப்பது பற்றி அரசாங்கம் விசாரணை நடத்த வேண்டும் என்று முன்னாள் அமைச்சரும், சிங்கள ஆராய்ச்சி பெரமுன தலைவருமான காமினி ஜயசூரியா வேண்டுகோள்விடுத்துள்ளார்.

அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையொன்றில் சபாநாயகரின் குற்றச்சாட்டில் உண்மை இருக்குமேயானால் அது யுத்தத்தை தொடர்வதற்காக தமது முழு ஆதரவையும் நல்கும் மக்களுக்கு செய்யப்படும் துரோகமாகவே கருதப்படவேண்டும் என்றும் கூறியிருக்கிறார்.

கடந்த 4-ம் திகதிய லங்காதீப இதழில் சபாநாயகர் எம். எச். முகமதுவை மேற்கோள் காட்டி வெளியிடப்பட்டிருக்கும் ஒரு செய்தியில் அரசாங்கதரப்பிலும், இராணுவத் தரப்பிலும் இருக்கும் சிலர் யுத்தத்தை தொடர்வதன் மூலம் சொந்த வசதி வாய்ப்புகளை பெருக்குவது மற்றும் லாபமீட்டுவதில் குறியாக இருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இத்தகையதொரு பாரதூரமான குற்றச்சாட்டை சபாநாயகர் போன்ற முக்கிய பதவியில் இருக்கும் ஒருவர் தெரிவித்திருப்பது அசட்டை செய்யக் கூடியதல்ல.

தாய்நாட்டின் பாதுகாப்பு வரி என்றும் மற்றும் பல வழிகளிலும் யுத்தத்திற்கான பொருட்செலவை கடந்த பத்து வருடங்களுக்கும் மேலாக தாங்கிவரும் பொதுமக்கள் அரசாங்கம் தமிழரின் போராட்டத்தை முறியடித்துவிட முடியாமலிருப்பது கண்டு கவலை கொண்டுள்ளனர்.

இத்தகையதொரு சூழலில் அரசும், இராணுவத்தினரும் தமது சுயலாபங்கள் கருதியே யுத்தத்தை நீடிப்பதாகக் கூறுவது துரோகத்தனமின்றி வேறில்லை. எனவே சபாநாயகரின் இந்தப் பகிரங்க குற்றச்சாட்டு குறித்து பதிலளிக்கப்பட வேண்டும் என்றும் காமினி ஜயசூரியா தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## திட்டமிடலின் போது தொடர்புற யாழ்.மாநகரசபைகோரிக்கை

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட தெருக்கள், குளங்கள், வாய்க்கால்கள் ஆகியவை தொடர்பான அபிவிருத்தி வேலைகளைத் திட்டமிடும் போது யாழ். மாநகரசபையுடன் தொடர்பு கொண்டு திட்டமிடுமாறு யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட சமூக நிலையங்களை கேட்டுள்ளது.

மேலும் இவை தொடர்பான அபிவிருத்தி வேலைகளுக்கு யாழ். மாநகரசபையின் அங்கீகாரத்தை அவசியம்பெற வேண்டும் எனவும் மேலும் பணித்துள்ளது. (17)

## எவரும் எம்.பி. பதவியை எதிர்பார்த்து இணையமுடியாது

(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சிக்கும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணிக்குமிடையிலான இணைப்பு முயற்சிகள் இழுபறி நிலையில் உள்ளன.

காமினி திசாநாயக்கவையும் அவரது குழுவினரையும் பாராளுமன்றத்திற்குள் கொண்டு வருவதற்காக தமது எம். பி பதவியை விட்டுக் கொடுக்க எவரும் தயாராக இல்லை. அதனால் எவருமே அமைச்சர் பதவியை எதிர்பார்க்கமுடியாது என ஜனாதிபதி இப்போது கூறுகின்றார்.

## ஆயுதக்கொள்வனவு

...விடமும், அமைச்சரவைக்கும் சமர்ப்பித்து அனுமதி பெற்ற பிறகே கொள்வனவு செய்யப்பட்டது. டாங்கிகளின் தரத்தை மதிப்பிட எட்டு அல்லது பத்து சிரேஷ்ட அதிகாரிகள் கொண்ட குழு ஒன்றும் டாங்கிகள் தயாரித்த நாட்டுக்கு அனுப்பப்பட்டது. டாங்கி வியாபாரத்தில் வெளிநாட்டு நிறுவனத்தின் பிரதிநிதியாக ஒரு இளைப்பாறிய கடற்படை அதிகாரி செயற்பட்டார் இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

அவர் செய்தியாளருக்கு வழங்கிய பேட்டியில் சில பகுதிகள் வருமாறு:

கேள்வி: கேள்விப்பத்திர ஒழுங்குகள் இல்லாமல் நீங்கள் வை-8 விமானம் கொள்வனவு செய்ததாக சிறுபத்திரிகை ஒன்று எழுதியுள்ளது. அது பற்றி உங்கள் விளக்கம்என்ன?

பதில்: வை-8 விமானங்கள் சீனாவில் மாத்திரம் தயாரிக்கப்படுகின்றன. சீனாவைத் தவிர வேறு நாடுகளில் இந்த ரக விமானங்களைக் கொள்வனவு செய்ய முடியாது. விமானப் படைத் தளபதி செய்த விசேட பேரத்தின் அடிப்படையில் இந்தக் கொள்வனவு

...பானங்கள் இல்லை என்று குறிப்பிட்டிருக்கிறது.

பதில்: இந்த ரக கவச வாகனங்கள்தான் அப்போது சிறிலங்காவுக்கு கிடைக்கக்கூடியதாக இருந்தது. தொழில்நுட்ப ஆலோசகர்களும், இராணுவத் தளபதியும் ரி-85 ரகக் கவசவாகனங்களைக் கொள்வனவு செய்யும்படி பரிந்துரைத்தார்கள். இந்தக்கொள்வனவு தொடர்பாக அமைச்சு ஏற்கனவே முடிவெடுத்திருந்தது. இராணுவம் ஒரு தொடர் நடவடிக்கையாகவே இந்தக் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டது.

கேள்வி; சிறிலங்காவிமானப் படையின் பாவிப்பில் உள்ள புக்கனோ மற்றும் சியா மாச்செட்டி விமானங்களுடன் ஒப்பிடும்போது புக்காரா விமானங்களைக் கொள்வனவு செய்தது பற்றி உங்கள் கருத்தென்ன?

பதில்; புக்காராதயாரிக்கும் நாட்டிற்கு விஜயம் செய்து அந்த விமானங்களைப்பற்றி நன்கு தெரிந்துகொண்டபிறகு விமானப்படை சிபாரிசு செய்தது. புக்காரா விமானம் பயங்கரவாத நடவடிக்கைக்கு எதிரான தாக்குதல் வலுவுடன், நீண்டநேரம் செயற்படக்கூடியதும், அதிக வெடிமருந்துகளை

# விடுதலைப் புலிகளின் செயற்பாடு

காரிகள் பதவி விலகுவதும் அல்லது விலக்கப்படுவதும் பொதுவான ஒன்றுதான். அந்த வகையில், சிறிலங்காவின் ஆயுதப்படை அதிகாரிகளின் பதவி நிலை மாற்றங்கள், அதிகார மாற்றங்கள் ஏற்படுகின்றமையும் புதியதொன்றல்ல ஏனெனில், சிறிலங்கா ஆயுதப்படை எதிர்கொள்ளும் தொடர்ச்சியான தோல்விக்கு உயர் அதிகாரிகள் தார்மீகப் பொறுப்பு ஏற்காவிடில் வேறு வழி இல்லை. ஆனால், அதிகாரிகள் மட்டத்தில் பெரும் மாறுதல்கள் செய்யாமல், சிறிதளவு அதிகார மாற்றத்துடன் கூடிய ஆயுதப் படையின் கட்டளையிடும் அமைப்பு முறையை அடிக்கடி மாற்றுவது சிறிலங்காவிற்கே உரிய சிறப்பம்சமாகும்.

இந்நிலையானது, சிறிலங்கா அரசாங்கமானது அண்மைக்கால தோல்விகளை ஜீரணித்துக்கொள்ள முடியாமையால் தவிப்பதை வெளிப்படுத்துவதாகவே உள்ளது. ஆகையினால்தான் போரில் எவ்வாறேனும் வெற்றி பெற்றுவிட வேண்டும் என்ற நோக்கில் கட்டளை இடும் அமைப்பை அடிக்கடி மாற்றி வருகிறது.

ஆனால், சிறிலங்கா அரசு ஏற்படுத்திய மாற்றமானது,அது எதிர்பார்க்கும் இராணுவ வெற்றிகளை எவ்வாறு ஈட்டிக் கொடுக்கும் என்பது கேள்விக்குரியதே. இருப்பினும் இதுவரை இராணுவ நடவடிக்கைக்குப் பொறுப்பாக இருந்த கூட்டுப்படை நடவடிக்கைத் தலைமையகத்திற்குப் பதில் உருவாக்கப்பட்டுள்ள பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழு முன்னதைவிட சற்று விரிவான அதிகாரங்களைக் கொண்டதாகவே உள்ளது.

அதாவது, முன்னர் பாதுகாப்பு அமைச்சிற்கும் ஆயுதப் படைத் தலைமைக்கும் இடையில் இருந்த இடைவெளி நீக்கப்பட்டுள்ளதெனலாம். பாதுகாப்புச் செயலாளரே பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவராகவும் இருப்பது இதனைக் காட்டுவதாகவே உள்ளது. மறுவளமாக, தாக்குதல் நடவடிக்கைக்குப் பொறுப்பாக உள்ளவரே பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகவும் இருப்பது அரசிற்கும், ஆயுதப் படையினருக்கும் இடையில் ஓர் ஒருங்கிணைப்பு அம்சமாகவே இருக்கும். அத்தோடு, ஆயுதப் படையின் சேவையில் உள்ள ஒருவரே (இதுவரை இல்லாதது போன்று) பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருப்பதும் முக்கியமானதொன்றாகும்.

ஆனால், சிறிலங்கா ஆயுதப் படையின் தோல்விகளுக்கு முக்கியமான காரணமான விடுதலைப் புலிகளின் ஆற்றல் இம்மாற்றத்தினால் எந்தவித பாதிப்பிற்கும் உள்ளாகாது என்பது ஒருபுறம் இருக்க, ஆயுதப்படைத் தளபதிகளின் திறமையின்மையும், அவர்களுக்கு இடையில் உள்ளபோட்டியையும், உட்பூசலையும் இம்மாற்றங்கள் எந்த விதத்திலும் மாற்றிவிடும் என்பதற்கில்லை. ஏனெனில் ஆயுதப்படை அமைப்பு மாறியுள்ளதே ஒழிய, அதிகாரிகள் மாறவில்லை. அவர்களின் அதிகாரங்கள் குறைக்கப்படவில்லை. பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் வோல்டர் பெர்னாண்டோ இம்மாற்றத்தைப் புறக்கணித்து இராஜினாமாச் செய்திருக்கலாம். ஆனால், பிரதான முரண்பாடு கொண்டவர்களுக்கு இடையில் இம்மாற்றம் பிரச்சினையைத் தீர்க்கவில்லை என்பதோடு, மேலும் முரண்பாடுகளைத் தீவிரமாக்கும் ஒன்றாகவே உள்ளது. இந்நிலையில் அமைப்பு மாற்றம் இராணுவ வெற்றிகளைத் தேடித் தரும் என்பது தலைவலிக்காகத் தலையணையை மாற்றியதொன்றாகவே இருக்கும்.

---

இவ் இரண்டு கொள்கலன்களுக்குள்ளும் அம்புலன்ஸ் ஒன்றும் மெத்தைகளும் அடங்குகின்றன எனயாழ். போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் நமது செய்தியாளருக்கு தெரிவித்தன.

அடுத்த கட்டமாக மற்றைய கொள்கலன்களும் திறக்கப்பட்ட பின்னர் பொருள்களின் அத்தியாவசிய தேவை அடிப்படையில் கட்டம் கட்டமாக யாழ். போதனா வைத்திய

...ழகத்திற்கும் இடையில் நடைபெற்ற கைப்பந்தாட்டப் போட்டியில் மயிலங்காடு விளையாட்டுக்கழகம் வெற்றியீட்டியுள்ளது.

**கூட்டம்**

யாழ்ப்பாண கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் இன்று காலை 9 30 மணியளவில் யாழ்ப்பாண இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

செய்யக் கூடியதல்ல

பாதுகாப்பு வரி என்றும் மற்றும் பல வழிகளிலும் யுத்தத்திற்கான பொருள் செலவை கடந்த பத்து வருடங்களுக்கும் மேலாக தாங்கி வரும் பொதுமக்கள் அரசாங்கம் தமிழரின் போராட்டத்தை முறியடித்துவிட முடியாமலிருப்பது கண்டு கவலை கொண்டுள்ளனர்.

இத்தகையதொரு சூழலில் அரசும், இராணுவத்தினரும்

---

...படை அதிகாரி செயற்பட்டார் இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

அவர் செய்தியாளருக்கு வழங்கிய பேட்டியில் சில பகுதிகள் வருமாறு:

கேள்வி: கேள்விப்பத்திர ஒழுங்குகள் இல்லாமல் நீங்கள் வை-8 விமானம் கொள்வனவு செய்ததாக சிறுபத்திரிகை ஒன்று எழுதியுள்ளது. அது பற்றி உங்கள் விளக்கம் என்ன?

பதில்: வை-8 விமானங்கள் சீனாவில் மாத்திரம் தயாரிக்கப்படுகின்றன. சீனாவைத் தவிர வேறு நாடுகளில் இந்த ரக விமானங்களைக் கொள்வனவு செய்ய முடியாது. விமானப் படைத் தளபதி செய்த விசேட பேரத்தின் அடிப்படையில் இந்தக் கொள்வனவு செய்யப்பட்டது. அவருடைய தொழில் நுட்ப ஆலோசகர் அதற்கான ஆலோசனையை வழங்கினார். வழக்கம்போல் அமைச்சரவை உப-குழு அதற்கான அனுமதியை வழங்கியது.

கேள்வி: எம்-18, எம் ஐ -17 ரக விமானங்களைக் கொள்வனவு செய்ய உங்களால் கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டன ஏன்?

பதில்: கேள்விப்பத்திரங்களைப் பரிசீலித்த விமானப் படைத் தளபதியும், அவரின் தொழில் நுட்ப ஆலோசகர்களும் எம். ஐ-17 ரக விமானம் கடைசியாக வந்த மிக நவீன விமானம் என்று சிபார்சு செய்தார்கள். அவர்கள் இந்த விடயத்தில் திறமைசாலிகள். அவர்களுக்குத்தான் அதைப்பற்றித் தெரியும். இந்த ரக விமானங்களைக் கொள்வனவு செய்ய வேண்டும் என்று நான் ஏதேச்சையாக முடிவு எதுவும் எடுக்கவில்லை. மற்றும்படி வழமையான ஒழுங்குகள் பின்பற்றப்பட்டன.

கேள்வி: அந்தப் பத்திரிகை அதே கட்டுரையில் பி-85 கவச வாகனங்களுக்கு உதிரிப்

...தது. இராணுவம் ஒரு தொடர் நடவடிக்கையாகவே இந்தக் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டது.

கேள்வி; சிறிலங்கா விமானப் படையின் பாவிப்பில் உள்ள துக்கனோ மற்றும் சியா மாச்செட்டி விமானங்களுடன் ஒப்பிடும்போது புக்காரா விமானங்களைக் கொள்வனவு செய்தது பற்றி உங்கள் கருத்தென்ன?

பதில்; புக்காராதயாரிக்கும் நாட்டிற்கு விஜயம் செய்து அந்த விமானங்களைப்பற்றி நன்கு தெரிந்துகொண்டபிறகு விமானப்படை சிபாரிசு செய்தது. புக்காரா விமானம் பயங்கரவாத நடவடிக்கைக்கு எதிரான தாக்குதல் வலுவுடன், நீண்டநேரம் செயற்படக்கூடியதும், அதிக வெடிமருந்துகளையும் எடுத்துச்செல்லக்கூடியது. அதன் செயற்பாடும் திறமையானது அத்துடன் இரண்டு இயந்திரங்கள் பொருத்தப்பட்டிருப்பதால் மேலதிக பாதுகாப்பு உடையது.

கேள்வி: பாதுகாப்புச் செயலாளர் என்ற வகையில் நீங்களும், அமைச்சும் சீன நிறுவனமான நொறின்கோவிடமிருந்து அதிகமான ஆயுதங்கள் கொள்வனவு செய்ததாகக் குற்றம் சாட்டப்படுகிறது. நீங்கள் அந்த நிறுவனத்தின் உள்ளூர் பிரதிநிதியாகச் செயற்பட்டதாகவும் சொல்லப்படுகிறது.

பதில்: நான் பாதுகாப்புச் செயலாளராக வருவதற்கு முன்பு இரு அரசுகளுக்கும் இடையிலான உறவின் அடிப்படையில் மலிவான விலையில் ஆயுதங்கள் வாங்கப்பட்டன. மற்ற நாடுகள் எமக்கு ஆயுதங்கள் விற்க மறுக்க சீனா ஒரு நண்பனாக வந்து எம்மைக் காப்பாற்றியது எமக்கு நன்மையாக அமைந்தது. நான் எவருடைய பிரதிநிதியாகவும் செயற்படவில்லை. இது ஆதாரமற்ற வெறும் பொய். ஏற்றுக்கொள்ளமுடியாத குற்றச்சாட்டு.

கேள்வி: பாதுகாப்புச் செயலாளர் பதவியைப் பாவித்து நீங்கள் பணம் சேர்த்ததாக உள்ளூர் சிறு பத்திரிகை உங்களை முதல் முறையாகச் சாடியுள்ளது. உங்கள் விளக்கம்?

பதில்: இது அபத்தமானது ஆதாரமற்ற பொய், நாற்பத்திமூன்று வருடங்களாக நல்லதிலும், கெட்டதிலும் என்னுடன் செயலாற்றிய மனிதர்களின் (இராணுவம்) உயிரைப் பணயம்வைத்து நான் பணத்தைச் சம்பாதித்தேன் என்ற குற்றச்சாட்டு கோழைத்தனமானதாகும். அதுவும் நான் சிறிலங்காவை விட்டு வெளியேறியபின்.

---

# விடுதலைப் புலிகளின் செயற்பாடு தமிழ் நாட்டில் இல்லை

## -முதல்வர் ஜெயலலிதா அறிவிப்பு

[சென்னை]

தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளின் செயற்பாடு எதுவும் இல்லை என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா திட்டவட்டமாக தெரிவித்துள்ளார். தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் இருப்பதாகவும், கர்நாடக மாநிலத்தில் ஊடுருவி இருப்பதாகவும், வீரப்பன் குழுவுடன் சேர்ந்து செயற்படுவதாகவும் மத்திய அமைச்சர் எஸ் பி. சவான் அண்மையில் தெரிவித்திருந்த கருத்தை திட்டவட்டமாக மறுத்த முதல்வர் ஜெயலலிதா மேலும் கூறுகையில்,

தாம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றது முதல் விடுதலைப் புலிகளை அழிக்க கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டதாகவும், தடைவிதிப்பது உட்பட பல் வேறு விடயங்களில் மத்திய அரசின் உதவியைக் கோரிப் பெற்றதாகவும் சுட்டிக்காட்டினார்,

தேசிய பாதுகாப்புடன் சம்பந்தப்பட்டுள்ள புலிகளின் நடவடிக்கை பற்றிய விடயத்தில் மாநில அரசுக்கு மத்திய அரசின் உதவி வேண்டும் என்றும், விடுதலைப் புலிகளைக் கண்காணிப்பதில் மத்திய அரசின் கட்டுப்பாட்டிலுள்ள கடற்படைக்கும், கடலோர காவற்படைக்கும் இது போன்ற இதர அமைப்புக்களுக்கும் பங்கு உண்டு என்றும், ஊடுருவல் ஏதும் இருப்பதாக அவதானிக்கப்பட்டால் மாநில அரசுக்கு தெரிவிக்க வேண்டுமேயன்றி இவற்றை அரசியல் லாபத்திற்காக பயன் படுத்தக் கூடாது என்றும் ஜெயலலிதா தெளிவுபடுத்தியுள்ளார்.

தமிழகத்திலுள்ள இலங்கை அகதிகளை திருப்பி அனுப்புவதிலும், மாநில காவற்படையை பலப்படுத்துவதிலும் மத்திய அரசு அரைமனத்துடனேயே செயற்படுவதாகவும் ஜெயலலிதா மேலும் கூறியுள்ளார்.

---

**புலிகளினதும்**

உபத்திரவம் கொடுத்தாலும் அதற்கு தமிழ் மக்கள் ஈடுகொடுத்து நிற்கின்றனர் என்பதை அரசாங்கமும் இராணுவமும் உணர்வதன் மூலமே இனப்பிரச்சினைக்கு முடிவு வரும்.

இலங்கையின் இனப்பிரச்சினை உள்நாட்டுப் பிரச்சினையாக மாத்திரம் இல்லாமல் சர்வதேச அரங்கிற்கு அனைவரது கவனத்தையும் ஈர்க்கு மளவிற்கு சென்று விட்டது என்பதைத்தான் சர்வதேச முயற்சிகள் காட்டி நிற்கின்றன.

இவ்வளவு அழிவுகள், சேதங்கள், உயிரிழப்புகளுக்கு மத்தியிலும் தமிழ் மக்களும் சரி, விடுதலைப்புலிகளும் சரிஉறுதி குலையாமல் இருக்கின்றனர். இந்த உறுதிப்பாடு நீடிப்பதன் மூலமே அரசாங்கத்தின்நிலைப் பாட்டில் மாற்றத்தைக்கொண்டுவரக் கூடியதாக இருக்கும்.

தேர்தலை நடத்துவதன் மூலம் ஜனநாயகத்தை மீளக் கொண்டுவரலாம் என்று கூறப்படுகின்றது பற்றி கேட்ட போது-

ஜனநாயகத்தை கொண்டு வருவதற்கு முதலில் வடக்கு-கிழக்கில் அமைதி நிலவ வேண்டும் இந்த அமைதியை இருபகுதியினரால் தான் கொண்டுவர முடியும். ஒன்று புலிப்படையினர் இரண்டாவது அரசாங்கம். இந்த இரு பகுதியினரின் சம்மதத்துடன் கொண்டுவரப் படாத எந்த முடிவும், நடைமுறைப்படுத்தப்படமுடியாது.

இடைக்கால சபை அமைப்பது பற்றி என்ன கருதுகிறீர்கள் என கேட்கப்பட்ட போது-

யார் அமைப்பது? அரசாங்கம், புலிப்படை ஆகிய இரு பகுதியினரைத்தவிர்த்து வேறு யாரும் எவ்வாறான முடிவை மேற்கொண்டாலும் அது நடைமுறைக்கு வராது அப்படி வந்தால் கூட அது பாதகமாகவே அமையும்.

அரசாங்க அமைச்சர் என்ற வகையில் அல்ல, தமிழன் என்ற வகையிலேயே இந்த சமாதான முயற்சியில் இறங்கியுள்ளேன் என்று அவர் அப்பேட்டியின் போது தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் சமாதான யோசனையை விரைவில் ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் தெரிவிக்கவுள்ளேன் என்று அமைச்சர் தொண்டமான் தினகரனுக்கு அளித்த பேட்டியின் போது குறிப்பிட்டார்.

ஜனாதிபதி, பிரதமருடனான சந்திப்புகளின் போது நல்ல பெறு பேறுகள் கிடைத்தால் யாழ்ப்பாணம் போவது குறித்து முடிவு செய்வேன்.

முன்னர் சமாதான யோசனை தொடர்பாக நீங்கள் மேற்கொண்ட போது அப்பொழுது அந்த முயற்சிக்கு கடுமையான எதிர்ப்பு தென்பட்டதை அவதானிக்க முடிந்தது. ஆனால் இன்று அவ்வாறான நிலை இல்லை எல்லோரும் இந்த முயற்சியை வரவேற்பதாகவே தெரிகிறது இது குறித்து உங்கள் கருத்து என்ன என்று கேட்கப்பட்ட போது-

இரு தரப்பிலும் பலர் இறக்கின்றனர் படை வீரர்கள் பலியாகின்றனர் இந் நிலையில் நாட்டு மக்கள் இதற்கொரு சமாதானத்தீர்வுவேண்டும் என உணர்ந்துள்ளனர். எனவே இச் சமாதானத்தீர்வு; முழுநாட்டிற்கும் ஏற்புடையது நன்மையளிக்கக் கூடியது

வடக்கு- கிழக்கு இனப்பிரச்சினைக்கு முழுமையான சமாதான தீர்வு காணப்படவேண்டும் அதற்கான சமாதான யோசனையே இப்போது அவசியம். இடைக்கால நிர்வாக சபை பிரச்சினைக்கு ஒரு பகுதி தீர்வாகவே அமையும் இது பிரச்சினையைத் தீர்க்காது என்று அப்பேட்டியின் போது திரு தொண்டமான் குறிப்பிட்டார்.

யாழ். இந்து மகளிர் கல்லூரி

பொன் விழா ஆண்டின்

# கலை விழா

முதலாம் நாள்

கல்லூரி மாணவிகள் வழங்கும் நிகழ்வுகள்

காலம்: 09-09-1993 வியாழக்கிழமை மாலை 4-30 மணி

இடம்: கல்லூரி திறந்த வெளியரங்கு

தலைவர்: திருமதி தி. நாகராசா, அதிபர்

பிரதம விருந்தினர்: திரு. எஸ். பத்மநாதன் [திட்டப் பணிப்பாளர், செயலகம், யாழ்ப்பாணம்.]

சிறப்பு விருந்தினர்கள்:

திரு அ. பஞ்சலிங்கம் [அதிபர் யாழ். இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்]

திரு. அருண்மாஸ்ரர் [தமிழீழக் கல்வி மேம்பாட்டுக்கழகம், நல்லூர்.]

நிகழ்ச்சி நிரல்

5-00-5-30 மணி: குழுப்பாடல்

5-35-6-05 மணி: ''The Whirl Wind'' (English Drama)

6-10-6-40 மணி:- ''ஒரு பூனையின் விலை என்ன?'' [சிறுவர் நாடகம்]

6-45-7-15 மணி: பல்லியம் [கீழைத் தேசம்]

7-20-7-50 மணி: ''நல்லைக் குறவஞ்சி'' [நாட்டிய நாடகம்] ஆக்கம்: பிரம்மஸ்ரீ என். வீரமணிஐயர்

7-55-8-15 மணி: பல்லியம் [மேலைத்தேசம்] ஆக்கம்: எம். கண்ணன்

நன்றியுரை:

மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், நலன்விரும்பிகள், பழைய மாணவர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பொன்விழாச் சபையினர்.

விளம்பர அன்பளிப்பு: ஈஸ்வர பகவான் அன் கொம்பனி
மொத்த சில்லறை பல சரக்கு வியாபாரம்
104, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் [சி-7373]



யாழ், பல்கலைக் கழக

# வெளிவாரி விரிவுரைகள்

❋ G. A. Q. ❋ B. A. Part- I
❋ First in Com. ❋ B. Com. Part-I
❋ B. Com. Part - II

ஆரம்பம்: 11-09 1993

குறிப்பு: பாடத்திட்டம் பூர்த்தியாக்கப்பட வேண்டியிருப்பதால் பரீட்சை முடிவு வரும்வரை காத்திராது விரிவுரைகளுக்கு சமுகந்தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

உயர்கலைக்கல்லூரி

ஆனைப்பந்தி. (5911)


## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 07-09-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 10800

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

28 2829, 26-5113, 24-9609, 27-9772, 28-2979
26-2668, 43-1019, 26-4568, 27-2089, 26-7219
28-1085, 42-2397, 28-6546, 26-2145, 27-0991
28-1185, 42-3368, 41-1092.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

41-8096, 28-4193, 24-4701, 41-9487, 36-4842


## தவறிவிட்டது

கருநீலநிற பாக் ஒன்று கோவிக் கரையில் தவறிவிட்டது. அதற்குள் மிகத் தேவையான புத்தகங்களும் உடுபுடைவைகளும் உள்ளன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் காரியாலயத்திலோ ,48/1 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்திலோ ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (5917)



## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில் 02 - 05 - 1975



தாயக மண்ணில் 08 - 09 - 1991

மணலாறில் நேரடி மோதலில் வீரச்சாவடைந்த

வீரவேங்கை பரிமளா

[ கந்தசாமி சந்திரபவானி (ஈசா) ]

இன்று 08-09-1993 எமது இல்லத்தில் நடைபெறும் அஞ்சலி வைபவத்தில் கலந்து சிறப்பிக்குமாறு போராளிகள், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

- குடும்பத்தினர்.

(5915)



## ஓராண்டு நினைவஞ்சலி




# யுத்தத்தை நீடித்து பணம் பெற சிலர் விரும்புகின்றனர்

## சபாநாயகர் முகமட் குற்றச்சாட்டு

வடகிழக்கு யுத்தம் முடிவின்றி நீடிப்பதைக் கண்டு மகிழ்ச்சியடைய சிலர் இந்நாட்டில் இருக்கின்றனர். அரசிலும் பாதுகாப்பு படையிலும் இருக்கும் இத்தகையோர் இந்த யுத்தத்தை நீடித்து பணம் தேடிக்கொள்கின்றனர் என சபாநாயகர் எம். எச். முகமட் தெரிவித்தார்.

கொழும்பில் பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் மேலும் உரையாற்றுகையில் யுத்தத்தைக் காட்டி சில அதிகாரிகள் லட்சக்கணக்கான பணத்தைத் தேடிக்கொள்கின்றார்கள் என தனக்குப் பல முறைப்பாடுகள் வந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

வடகிழக்குப் பிரச்சினை ஒரு தேசிய பிரச்சினை என்பதால் கூடிய விரைவில் முடிவு பெறுவதைத் தான் விரும்புவதாகவும் நாட்டின் அபிவிருத்தியைக் கருத்தில் கொண்டு இதைச் சமரசமாகத் தீர்த்து வைக்க முடியுமெனவும் அவர் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் யோசனை என்னவெனத் தனக்குத் தெரியாதெனவும் தொண்டமான் அவர்களைத் தான் சந்திக்கவில்லையெனவும் கூறினார்.

வெளிநாட்டு அமைதிப் படை, ஐ நா. அமைதிப்படை என்பவை பற்றி அவர் குறிப்பிடுகையில் அவர்களால் சோமாலியா, பொஸ்னியா போன்ற நிலைமைகள் இலங்கையிலும் ஏற்படலாமெனவும் கூறினார்.

## மஸ்கெலியா தொழிலாளரை குடியேற்ற முயற்சி

(கொழும்பு)

மலையக தோட்டத் தொழிலாளர்களை கந்தளாயில் கொண்டு சென்று குடியேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கான அறிவித்தல்கள் மஸ்கெலியா பகுதியில் பிரதான இடங்களில் ஒட்டப்பட்டுள்ளது கந்தளாய் பகுதியில் குடியேறி அங்கு சீனி கூட்டுத்தாபனத்தில் பணிபுரிய விரும்புபவர்களுக்கு நிலமும், வீடு கட்ட உதவியும் வழங்கப்படும் என இந்த அறிவித்தல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த சில மாதங்களுக்கு முன் மஸ்கெலியா பகுதியிலிருந்து கரும்பு வெட்ட என கந்தளாய் கொண்டு செல்லப்பட்ட தொழிலாளர்கள் குறைந்த கூலியில் வேலைக்கமர இசைந்த போது கந்தளாயில் உள்ள சிங்கள கூலித்தொழிலாளர்கள் எழுப்பிய கடும் ஆட்சேபனையை அடுத்து மலையகத் தொழிலாளர்கள் மீண்டும் மலையகம் திரும்ப வேண்டிய நிலை ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது.

## நேர்முகப்பரீட்சை

வவுனியா விவசாயக்கல்லூரி அனுமதி பெறுவதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 13 ஆம் திகதி காலை 8 30 மணிக்கு திருநெல்வேலி உதவி விவசாய பணிப்பாளர் [விரிவாக்கம்] அலுவலகத்தில் நடத்தப்படும். முன்னர் அறிவித்தபடி எழுத்துப் பரீட்சை நடாத்தப்படமாட்டாது.

## சாளரம் வெளிவந்தது

[யாழ்ப்பாணம்]

சாளரம் செப்ரெம்பர் மாத இதழ் வெளிவந்து விட்டது. பயன்தரு விடயங்களுடன் கணித மேதை இராமானுஜன் பற்றிய முடிவிலாப் பேருவலின் முடிவை அறிந்தவர் என்ற தலைப்பிலான பிரசுரம் ஒன்றும் சாளரத்துடன் இலவச இணைப்பாக இணைக்கப்பட்டுள்ளது.

## இரு இளைஞர் கைது

ரோம் நகரிலிருந்து விமானம்மூலம் கட்டுநாயக்கவிமான நிலையம் வந்து சேர்ந்த இரு தமிழ் இளைஞர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்.

கைதான இரு இளைஞர்களும் யாழ் நகரைச் சேர்ந்தவர்களாவர்.

## ஐ. நா. அதிகாரி விஜயம்

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்ட ஆலோசகர் திரு மல்கம் றிட்அவுட் யாழ். மாவட்டத்திற்கு உத்தியோகபூர்வமான பயணமொன்றை மேற்கொண்டு நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளார்.

இவர் நேற்று யாழ். குடாநாட்டில் அமைந்துள்ள சில இடம் பெயர்ந்தோர் முகாம்களிற்கு விஜயம் செய்து பார்வையிட்டுள்ளார்.

மேலும் இவ் அதிகாரி இரண்

## விளையாட்டு போட்டி

(பருத்தித்துறை)

பருத்தித்துறை தும்பளை தெற்கு டார்லி பாலர் பாடசாலையும், தும்பளை கிழக்கு ஜெயசீலி பாலர் பாடசாலையும் இணைந்து நடாத்திய ஆரம்ப ஆண்டு விளையாட்டுப் போட்டி டார்லி பாலர் பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது. தமிழீழ விடுதலைப் புலிகள் கிராமியப் பொறுப்பாளர் திரு. பழனி முத்து தமிழீழ தேசியக் கொடியை ஏற்றி போட்டிகளை ஆரம்பித்து வைத்தார்.


## மரண அறிவித்தல்கள்

திருமதி

லோகேஸ்வரன் ஜெயக்குமாரி

காரைநகர், களபூமியைச் சேர்ந்த இளைப்பாறிய வைத்திய அதிகாரி ஆறுமுகம் சோமசுந்தரம் செல்லம்மா தம்பதிகளின் புதல்வி திருமதி லோகேஸ்வரன் ஜெயக்குமாரி கடந்த 4ஆம் திகதி கனடாவில் அகால மரணமானார். அன்னார் தம்பையா லோகேஸ்வரன் (கனடா) அவர்களின் அன்பு மனைவியும், தினேஷ்குமார் (கனடா), அஜித்குமார் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், சந்திரகுமாரி, பாலேந்திரன் (கனடா), சுரேந்திரன், ரவீந்திரன் [கனடா] ஆகியோரின் சகோதரியும், சு. இரத்தினராசா (கோபால்), திருமதி பா. சந்திரகுமாரி, திருமதி சு. சாந்தகுமாரி ஆகியோரின் மைத்துனியும் சாந்தி, சர்மிலா ஆகியோரின் சித்தியும், ஜனனி, தர்சிகா, மயூரன் ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை கனடாவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்,

வெளிவாரி விரிவுரைகள்

❋ G. A. Q. ❋ B. A. Part- I
❋ First in Com. ❋ B. Com. Part-I
❋ B. Com. Part - II

ஆரம்பம்: 11-09 1993

குறிப்பு: பாடத்திட்டம் பூர்த்தியாக்கப்பட வேண்டியிருப்பதால் பரீட்சை முடிவு வரும்வரை காத்திராது விரிவுரைகளுக்கு சமுகந்தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**உயர்கலைக்கல்லூரி**
**ஆனைப்பந்தி.** (5911)

யாழ் நகர் **ஸ்ரீதர்** திரையரங்கில்
"Battle of the Bulge"
**பல்ஜ் சமர்**
(தமிழாக்கம்)
டாங்கிகள் மூலம் மோதிக்கொள்ளும் பயங்கர சண்டைக் காட்சிகள் நிறைந்த படம்
தினசரி மாலை 4.00 மணி, 6.00 மணி
சனி, ஞாயிறு தினங்களில்
காலை 10.30 மணி,
மாலை 4.00 மணி, 6. 00மணி (சி-7352)

எமது
**நேற்றைய வெளியீடுகள்**
1) ரஜனி - பல்லவி - ஹரிகரன்
★ **வள்ளி**
2) பிரபு - குஷ்பு - கவுண்டமணி
★ **மறவன்**
3) மம்முட்டி - ஊர்வசி - ரகுவரன்
★ **தேவர் சாம்ராஜ்யம்**
4) ராம்கி - பேபிஷாலினி - செந்தில்
★ **தங்க பாப்பா**
(அனைத்தும் ORIGINAL பிரதிகள்)


**குணம் வீடியோ சென்ரர்**
42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
(குறிப்பு:- இந்த 4 படங்களின் "MASTER COPY" எங்களிடம் மட்டுமேதான் இருக்கின்றது )
(சி/7372)


[ கந்தசாமி சந்திரபவானி (ஈசா) ]

இன்று 08-09-1993 எமது இல்லத்தில் நடைபெறும் அஞ்சலி வைபவத்தில் கலந்து சிறப்பிக்குமாறு சோராவிகள், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மாரியம்மன் வீதி, - குடும்பத்தினர்.
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம். (5915)

## ஓராண்டு நினைவஞ்சலி



செல்வி
**யூடித்நிர்மலி சவரிமுத்து**
(நிம்மி)

மண்ணுலகில் நேசித்தவர்களே-என்னை
மரணத்திலும் நேசியுங்கள்.

| தாயின் மடியில்: | இறைவனடியில்: |
| --- | --- |
| 06-09-1972 | 08-09-1992 |

எங்கள் அன்பு செல்வமே சின்ன மகளே (நிர்மலி)
அன்பு பெற்றோர் மனம் கலங்கி
காலமெல்லாம் கண்ணீர் விட
பாசமுள்ள அக்கா பரிதவித்திட
பரிவுமிக்க அண்ணாமார் பதறிட
உற்றார் உறவினர் வாடிட-நீ
அஸ்தமித்த சூரியனாய் பாதியிலே மறைந்
தாயேயம்மா
ஆனந்த மழையில் நீராடிக்கும் இளமைப் பருவம்
வாட்டுதம்மா எமையெல்லாம்

ஓராண்டு என்ன எத்தனையாண்டு ஆனாலும் இருக்கின்றாய் இதயமெல்லாம் ஆருயிர் நிம்மியே உன் ஆன்மா இறையடிசேர கண்ணீர்ப் பூக்கள் கொண்டு பிரார்த்திக்கின்றோம்.

உன் பிரிவால் வாடும்
குருசு மதவடி, குடும்பத்தினர்
ஆனைக்கோட்டை. [சி/7369] உறவினர்கள்

முடிவை அறிந்தவர் என்ற தலைப்பிலான பிரசுரம் ஒன்றும் சாளரத்துடன் இலவச இணைப்பாக இணைக்கப்பட்டுள்ளது.

### ஐ. நா. அதிகாரி விஜயம்

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்ட ஆலோசகர் திருமல்கம் நிட்ஆவுட் யாழ். மாவட்டத்திற்கு உத்தியோகபூர்வமான பயணமொன்றை மேற்கொண்டு நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளார்.

இவர் நேற்று யாழ். குடாநாட்டில் அமைந்துள்ள சில இடம்பெயர்ந்தோர் முகாம்களிற்கு விஜயம் செய்து பார்வையிட்டுள்ளார்.

மேலும் இவ் அதிகாரி இரண்டொரு நாட்கள் இங்கு தங்கியிருப்பார் என தெரிவிக்கப்பட்டது. (பா)

### ஹமில்டன்கருத்து

(கொழும்பு)

மக்களிடமிருந்து புலிகளை தனிமைப்படுத்தி அவர்களை தோற்கடிப்பதே எமது பிரதான நோக்கம்எனபாதுகாப்பு அமைச்சின் புதிய செயலரும் புதிதாக உருவான பாதுகாப்பு இணைப்புக்குழுவின் தலைவருமான ஜெனரல் ஹமில்டன் வனசிங்க தெரிவித்துள்ளார்.

எயிட்ஸுக்கு
### 22 பேர் பலி

(கொழும்பு)

இலங்கை வைத்திய ஆராய்ச்சி நிலையத்தின் பிந்திய அறிக்கையின் படி எயிட்ஸ் நோய்க்கு இதுவரை இலங்கையில் 22 பேர் இறந்துள்ளனர். மேலும் இருவர் இந்த நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

தற்போது இலங்கையில் இந்த நோயினால் சுமார் 2400 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என சந்தேகிக்கப்படுகிறது. 97 பேர் எயிட்ஸ் நோய்க் காவியெனக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளனர்.

வெளிநாடுகளுக்குச் சென்று விட்டு வரும் இலங்கையர்களினாலும் இந்த நோய் பரவுகிறது என்று வைத்திய ஆராய்ச்சி நிலையப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

மன்னாருக்கு
விட்டதாகவும் சுதந்திரன் பரவின. கப்பலைத் தேடும் பணியில் அதிகாரிகள் இறங்கினர். அப்போதே அக்கப்பல் இரவோடிரவாக திருக்கோணமலைக்கு திரும்பிவிட்ட தகவல் தெரியவந்தது

இந்தியாவிலிருந்து திருமலை வந்துசேர்ந்த அகதிகளின் பொருள்களை ஏற்றிக் கொண்டு தீவுப்பகுதிக்கு செல்வதற்காகவே இக் கப்பல் திருமலைக்கு திடீரென திரும்பியதாக தெரியவந்தது.


## மரண அறிவித்தல்கள்

திருமதி
**லோகேஸ்வரன் ஜெயக்குமாரி**

காரைநகர், களபூமியைச் சேர்ந்த இளைப்பாறிய வைத்திய அதிகாரி ஆறுமுகம் சோமசுந்தரம் செல்லம்மா தம்பதிகளின் புதல்வி திருமதி லோகேஸ்வரன் ஜெயக்குமாரி கடந்த 4ஆம் திகதி கனடாவில் அகால மரணமானார். அன்னார் தம்பையா லோகேஸ்வரன் (கனடா) அவர்களின் அன்பு மனைவியும், திலேஷ்குமார் (கனடா), அஜித்குமார் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், சந்திரகுமாரி, பாலேந்திரன் (கனடா), சுரேந்திரன், ரவீந்திரன் [கனடா] ஆகியோரின் சகோதரியும், க. இரத்தினராசா (கோபால்), திருமதி பா. சந்திரகுமாரி, திருமதி சு. சாந்தகுமாரி ஆகியோரின் மைத்துனியும் சாந்தி, சர்மிலா ஆகியோரின் சித்தியும், ஜனனி, தர்சினி, மயூரன் ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை கனடாவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சோமசுந்தரம் சுரேந்திரன் [அண்ணன்]
இரத்தினராசா சந்திரகுமாரி (அக்கா)
8, சோமசுந்தரம் ஒழுங்கை, சுண்டுக்குளி. [5918]



**செல்லத்துரை வைத்தியநாதன்**
[அவுஸ்திரேலியா]

111, பூதவராயர் வீதி, திருநெல்வேலி கிழக்கைச் சேர்ந்த செல்லத்துரை-தங்கம்மா தம்பதிகளின் புதல்வன் செல்லத்துரை வைத்தியநாதன் அவர்கள் 5-9-93 இல் அவுஸ்திரேலியாவில்காலமானார். இவர் ஜோதியின் அன்புக் கணவரும், நம்மியா, குமரன், சரவணன் ஆகியோரின் அன்புத்தந்தையும் தனபாலசிங்கம், காலஞ்சென்ற செல்வநாயகி, இராஜரெட்ணம் (இங்கிலாந்து), சோதிமலர், நாகேஸ்வரி, இராஜசிங்கம் (சுவிஸ்), குலசிங்கம் (இங்கிலாந்து) ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் அவுஸ்திரேலியாவில் 6-9-93 அன்று நடைபெற்றது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்!
[5916] M. செல்லத்துரை [தந்தை]


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மல்கதிஸ்ச வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1993-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 08 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது